Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 21 (12.04.2004) திங்கட்கிழமை இதழ் :194

## ஐ.ம.சு.மு. அரசாங்கத்தில் ஜே.வி.பி. பங்கேற்காதாம்!

### இணையத் தளம் கூறுகிறது

ஜே.வி.பியின் சார்பாக, அமைச்சர் பதவியேற்க முன்மொழியப்பட்ட நான்கு பேரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சரவையில் பதவியேற்க மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இணையத் தளம் ஒன்று வெளியிட்டிருக்கும் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக ஜே.வி.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

ஆனால்- அமைச்சர்களை நியமிக்கும் போது, இந்த இருகட்சிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பின்பற்றப்படவில்லை என, ஜே.வி.பி. ஜனாதிபதி மீது குற்றம் சாட்டியது.

இரு கட்சிகளுக்குமிடையேயான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான போர்நிறுத்தமானது தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்!

### பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் - முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்குமென்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் செல்லுபடியாகும் தன்மை குறித்து எழுந்த கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே, சிறில் ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் பாரிய யுத்தத்திற்கான ஆரம்பம்

### ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், கருணா குழுவினருக்கும் இடையில் கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தம், அவர்கள் பாரிய யுத்தமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எனத் தாம் கருதுவதாக, ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மோதல் குறித்து கருத்து வெளியிட்டபோதே, ஜாதிக ஹெல உறுமய இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக- ஹெல உறுமய விடுத்துள்ள அறிக்கையில், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும், கருணா குழுவினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்கள் அவர்களுக்குள்ள உள்ளகப் பிரச்சினை எனக் கூறப்படுகின்றது

அதனை அவ்வாறு கருதமுடியாது. இவை பாரிய யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையாகவே கருதமுடிகின்றது.

விடுதலைப் புலிகள் இந்த நடவடிக்கையின் மூலம் பாரிய யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறியுள்ளனர்.

இவ்வாறான யுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் 1987

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு வாகரையில்

## புலிகள் மீட்டெடுத்த பகுதிகளில் மீளக்குடியேற மக்கள் விருப்பம்!



வாகரையில் வீடுகளுக்குத் திரும்பும் மக்கள்

(மட்டக்களப்பு)

வாகரைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், மீண்டும் தமது சொந்தப் பிரதேசத்திற்குச் செல்லவிரும்புவதாக, வாகரைப் பிரதேச உதவி அரசஅதிபர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

வாகரைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள 1500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், தாம் மீண்டும் அந்தப்பிரதேசத்துக்குச் செல்ல விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அந்தப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளமையை அடுத்து அங்கு அமைதி திரும்பியுள்ளது.

இதனால், அங்கு மக்கள் வாழக் கூடிய இயல்பான சூழல் ஒன்று தோன்றியுள்ளது. இதனையடுத்தே, பொதுமக்கள் அங்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உலர் உணவு மற்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்பாராத திடீர் நகர்வின் மூலம் அம்பாறையும் புலிகள் வசமானது!

### கருணா அணியை சுற்றிவளைக்க புதிய வியூகம்

### படகு மூலம் தப்பிய

## கருணா அணியை சுற்றிவளைக்க புதிய வியூகம்

(மட்டக்களப்பு)

**கிழக்கில் கருணா அணியினரின் கட்டுப்பாட்டிலிருந்து பொதுமக்களையும், போராளிகளையும் விடுவிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளால், அம்பாறை மாவட்டம் முழுமையாக நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்டத்தளபதி ஜனார்த்தன் தலைமையிலான படைப்பிரிவு ஒன்று அம்பாறை மாவட்டத்தை விடுவிப்பதற்கான தாக்குதல் நகர்வை நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்தது.**



மீட்கப்பட்ட வாகரைப் பகுதியில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர்.

திடீரென ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் மூலம் - கருணா அணியினரின் பிரதான செயற்பாட்டு மையமாக இருந்த கஞ்சிக்குடிச்சாறு காட்டுப்பகுதி உட்பட, அம்பாறை மாவட்டத்தின் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதி முழுமையாக விடுவிக்கப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து 96 கி.மீ தெற்காகவுள்ள கஞ்சிக்குடிச்சாறு பிரதேசம் மற்றும் அம்பாறையின் ஏனைய பிரதேசங்களை மீட்டிருக்கும், தளபதி ஜனார்த்தன் தலைமையிலான புலிகளின் படையணி அடுத்த கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்பகுதியை நோக்கி நகர்வதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

இதன்போது- திருக்கோவில், அக்கரைப்பற்று ஆகிய கரையோரப்பகுதிகளில் கருணா அணியினர் எந்த எதிர்ப்புமின்றி பின்வாங்கிச்சென்றதாக கூறப்படுகின்றது.

அத்துடன் - தளபதி ஜனார்த்தன் தலைமையிலான புலிகளின் படையணி சிதறியுள்ள கருணா அணியினரை சரணடையுமாறு நேற்றுக்காலை கண்டிப்பான அறிவித்தல்களை வெளியிட்டதாகவும் தெரியவருகிறது.

அம்பாறையில் ஆதிசுவரன், வினோ ஆகியோர் தலைமையிலான - 200 போராளிகள் கருணா குழுவை விட்டு விலகி மீட்பு அணிகளிடம் வந்து சேர்ந்துள்ளனர்.

அதேநேரம்- வாகரைப் பகுதிகளில் கருணா குழுவைச் சேர்ந்த 400 பேர் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளனர்.

பிந்திக் கிடைத்த தகவல்களின்படி- மேலும் 50 பேர் நேற்று மாலை கருணா குழுவைவிட்டு விலகி மீட்பு அணிகளிடம் வந்து சேர்ந்தனர்.

வாகரைப் பகுதிகள் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை பல போராளிகள் கருணா குழுவை விட்டு விலகி வருவதற்கு வாய்ப்பினை அளித்துள்ளது.

அதேநேரம் - கருணா குழுவைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளுக்கு செல்லும் நோக்கோடு கொழும்பிற்கு தப்பிச் செல்வதாக பிறிதொரு செய்தி தெரிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை வாகரையை கருணா அணியினரிடம் இருந்து விடுவித்த விடுதலைப் புலிகள் தொடர்ந்து முன்னேறியபோது (12 ஆம் பக்கம் பார்க்க)

படகு மூலம் தப்பிய

## கருணா அணியின் 18 பேர் கடற்படையினரால் கைது!

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மீட்பு அணிகள், கருணா குழுவுக்கு எதிராக தாக்குதலை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து அங்கிருந்து படகுமூலம் தப்பிச்சென்ற 18 பேர் கடற்படையினரிடம் பிடிபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

திருகோணமலை துறைமுகத்துக்கு அருகில் உள்ள நோர்வே ஐலட்டுக்கு அண்மையில் இவர்கள் 18 பேரும் கடற்படையினரிடம் சரணடைந்ததாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

எனினும், திருகோணமலை துறை முகத்துக்கு இவர்களில் எவரும் நேற்றிரவுவரை கொண்டுவரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பெருமளவு ஆயுதங்கள் வாகரைப் பகுதியில் மீட்பு!

வாகரைப் பகுதிகளில் கருணா குழுவினர் மீது கடந்த வெள்ளிக் கிழமை மேற்கொள்ளப்பட்ட கொமாண்டோ பாணியிலான விடுதலைப் புலிகளின் தாக்குதலில், பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

**இதுவரை மீட்கப்பட்டுள்ள ஆயு**தங்களின் விபரங்கள்:

120 மி.மீ மோட்டார்கள் - 3, 120 மி.மீ மோட்டார்களுக்கான எறிகணைகள் - [illegible]000 இற்கு மேல், 82 மி.மீ மோட்டார்கள் 4, 82 மி.மீ மோட்டார்களுக்கான எறிகணைகள்- 370, 50 கலிபர் துப்பாக்கிகள் 2 சிறு ரக துப்பாக்கிகள் 300 இற்கு மேல்,

இத்தாக்குதல்களின் வாகரைப் பகுதிகளில் மட்டும் கருணா குழுவைச் சேர்ந்த 400 வரையானோர் மீட்கப்பட்டுள்ளதாக நம்பகமான தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இத்தாக்குதல்களுக்கான கட்டளைத் தளபதியாக மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேசும், ஒருங்கிணைப்புத் தளபதியாக பிரபாவும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போலி தங்கநகை அடகுவைத்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்!

(தென்மராட்சி)

தங்கமுலாம் பூசப்பட்ட அழகு சாதனப் பொருள் ஒன்றை, வங்கி ஒன்றில் அடகுவைத்த பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கி ஒன்றில் தங்கநகை அடகு வைத்தவேளை - அந்த நகை தங்க முலாம் பூசப்பட்டது என இனங் காணப்பட்டதையடுத்து பொலிஸாருக்கு கொடுத்த தகவலை அடுத்து அந்தப் பெண்மணி கைது செய்யப் பட்டார்.

கிழக்கிலிருந்து வந்திருந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவரிடம் அந்தப் பொருளை வாங்கியதாகவும் அப்பெண்மணி பொலிஸாரின் விசாரணையின்போது தெரிவித்தார்.

தென்னிலங்கை, கிழக்கிலிருந்து பொருட்களைக் கொண்டு வரும் வர்த்தகர்களிடம் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் அவதானமாக இருக்க வேண்டுமெனப் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (34)



யு.என்.எச்.சி.ஆரின் நிதி அனுசரணையுடன், யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புப் பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வில் நடைபெற்ற கண்காட்சியில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.எஸ். சதானந்தம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ப.திலகநாயகம்போல், யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் கு.வி.நிசாந்தன் அருகில் நிற்பதையும் காணலாம்.

யாழ் நகர மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
Nantha Tex & Fancy House
வண்ண வண்ண ஆடைவகைகளை எண்ணம்போல் தெரிவுசெய்து கொள்ளவும்
நவநாகரீக பாணியிலமைந்த நவீன டிசைன்களிலான புத்தம் புதிய சாறி வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான இடம்
15 % கழிவு
நந்தா ரெக்ஸ்ரைல்ஸ் & பான்ஸி ஹவுஸ்
மானிப்பாய் ☎ 4590685
விரும்பியவாறு பெற்றுக்கொள்ளலாம்
☆ நங்கையர் விரும்பும் நவீன டிசைன் துணிவகைகள்
☆ சிறுவர், சிறுமியருக்கேற்ற றெடிமேற் ஆடைகள்
☆ ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங் வகைகள்
☆ அழகுசாதனப் பொருள்கள்
☆ அன்பளிப்புப் பொருள்கள் (சி-2558)

கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் ஸ்ராம் இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
விபரங்கள் அறிய
யசோ
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2395)

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும ஒரேதின வெளியீடாக விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த A.R. ரஹ்மானின் இசையில்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
(சி-2397)

திறைஞ்சனாஸ் சங்கானை
சேரன், ரதி நடித்த
சொல்ல மறந்த கதை
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
Maid in Man Hattan
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந்த் நடித்த உன்னை பார்த்த நாள் முதல்...
காட்சி நேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு 16 ஆம் திகதி முதல் விஜய் நடித்த கில்லி
(சி-2387)

திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தினால் பூங்கனிச்சோலை ஆதரவுடன் நடத்தப்படும்
நாட்டுப் பற்றாளரும், புலிகளின் குரல் நாடகக்கலைஞருமான
V.T.A விஸ்வா
ஞாபகார்த்த
வெற்றிக்கேடயத்திற்கான
வடமாகாண ரீதியிலான
மின்னொளியில் மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2004
போட்டி விபரம்:
1. 6 பேர் கொண்ட ஓவர் முறையிலான சுற்றுப்போட்டி
2. 4 பேர் கொண்ட ஓவர் முறையிலான சுற்றுப்போட்டி
3. செற்றப் முறையிலான சுற்றுப்போட்டி - ஆண்கள், பெண்கள்
விண்ணப்ப முடிவு திகதி : 18.04.2004.
விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடம் :
☆ பூங்கனிச்சோலை, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி.
☆ ஸ்ரீ விநாயகர் வீடியோ சென்ரர், திருநெல்வேலி.
தொடர்புகளுக்கு : T.P - 021222 2976, 7369 (சி-2460)

புதுவருட வாழ்த்துக்கள்
✻ அரிசி, மிளகாய், உழுந்து, கோப்பி என்பவற்றை தேவைக்கேற்ப மிருதுவாக அரைப்பதற்கு ஏற்ற உலகப் பிரசித்தி பெற்ற நவீன், ராஜா, அமுதா, கெனடி, றெக்ஸ், பிறாண்ட் இயந்திரங்கள்.
✻ நெல் குற்றுவதற்கான இயந்திரங்கள்
✻ ஈர அரிசி அரைக்கும் இயந்திரங்கள் இவையனைத்தையும் சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கு
✻ 8H.P, 10H.P, 20H.P உடைய டீசல் இயந்திரங்களும் உண்டு
வங்கி கடன் வசதிகள், தவணை முறை கடன் என்பன ஒழுங்குபடுத்தித் தரப்படும்.
யாழ்ப்பாணத்தில் ஏக இறக்குமதியாளரும் வினியோகஸ்தரும்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 5542
சமுத்ரா ரேட்ஸ் லிமிட்டட்
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2938
(சி/2442)
ஒருமுறை விஜயஞ் செய்து பாருங்கள்! உண்மை விளங்கும்.

தென்னிந்திய நடனக் கலைஞர்களின் நடன சங்கமமும், நடன பயிற்சியும்
பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகியவற்றை சென்னையை தளமாகக்கொண்ட உலகப்புகழ் பெற்ற தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாட்களிற்கு யாழ்.மண்ணில் நடாத்த உள்ளோம். (04.05.2004 - 10.05.2004 வரை) மேற்படி நிகழ்ச்சியானது நடனப் பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் பயின்றவர்களும் அந்தந்த நடன வடிவங்கள் சார்ந்த கலாஷேத்திரா, வழுவூர், பந்தணை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டி குச்சுப்புடி பயிற்சிநிலையம் முதலிய பள்ளிகளுடாக கற்றுத் தேர்ந்த விற்பன்னர்களாகவும் சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் உள்ள உலகப்புகழ் பெற்ற அலமேலுவும் உஷா வசந்தகுமார், உண்ணி கிருஸ்ணன் பரதநாட்டியமும், ராஜேஸ், லக்ஸ்மி பிரியா குச்சுப்புடி, ஸ்ரீபாலசுப்பிரமணியம் கதகளி ஆகியோரும் அவர்களது நடனக் குழுவினர் இந்நடன நிகழ்ச்சியையும் நடனப் பயிற்சியையும் வழங்க உள்ளார்கள். இந்த ஏழுநாள் நடனப் பயிற்சியில் (பரத நாட்டியம், குச்சுப்புடி, கதகளி) சேர விரும்பும் மாணவர்கள் 20.04.2004 செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் பதிவு செய்யவும்.
பதிவு செய்ய வேண்டிய முகவரி:
ரி.கே.ரூரிஸ்ற் இன்
பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 077 6143541, 021 222 5680
(சி-2459)





ஐ.ம.சு.மு. அரசாங்கத்தின் பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகாவை முதற்படத்திலும், சரத் அமுனுகம பதவியேற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# அரசியல் கட்சிகள் இணைந்த பின்னரே சமாதானப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும்!

## ஜாதிக ஹெல உறுமய தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக சகல அரசியற்கட்சிகளையும் ஒன்றாக்கிய பின்னரே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக ஒரு மூன்றாவது அரசியல் சக்தி தேர்தலில் போட்டியிட்டு, எதிர்பார்த்ததற்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றியதாக கொழும்பு மாவட்ட ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண.உடுவே தம்மலோகா தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-சமாதானப் பேச்சென்பது வெறும் கேலிக்கூத்து, நாட்டில் அப்படியொரு சமாதானம் இல்லை. புலிகளும், அரசாங்கமும் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைக்குப்பின்னர் அரசாங்கமே சமாதானத்தை வழிநடத்தியது. புலிகள் தமது எதிரிகளை அழிப்பதிலே இற்றவரை கவனம் செலுத்துகிறார்கள்.

புலிகள் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஹெல உறுமய ஏற்றுக்கொள்ளாது. அவர்கள் தமிழ் மக்களின் சமாதானத்துக்காகப் பேசவே தகுதியற்றவர்கள்.

சமஷ்டி என்பது சிறந்த முடிவல்ல. அது மேலும் நாட்டைத் துண்டுபோடும் ஒன்றே என்றேயாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் சட்டவிரோதமான அலுவல்களில் இன்னும் ஈடுபடுகின்றனர். எமது அரசியல் பிரவேசத்தின்பின் வன்முறைகள் குறைந்ததைக் காணக்கூடியதாக இருக்கிறது. இம்முறை சென்ற தேர்தலைப்போல ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் எமது நோக்கைப் புரிந்துள்ளனர். இதைப்பற்றி நாம் மகிழ்ச்சி அடைவதுடன், எமக்கு இது 30 நாள் வேலை. ஆனால், ஜே.வி.பி 30 வருட பயங்கரமான வேலை செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எமக்கு ஐ.ம.சு.மு, ஐ.தே.மு ஆகிய கட்சிகளில் நம்பிக்கை இல்லை. இதனால் நாம் சுதந்திரமாகச் செயற்படவிரும்புகிறோம். நாம் சம்பிரதாயபூர்வ எதிர்க்கட்சியாகவும் இயங்கவிரும்பவில்லை. வரும் அரசாங்கம் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரும்போது அதை ஆராய்ந்து நல்லவை என்பதுக்கு நாம் எமது ஒத்துழைப்பை நல்குவோம். இதனால், நடுநிலையாக - சார்பில்லாமல் சுதந்திரமாக இருக்கவிரும்புகிறோம்.

சமாதானம் என்பது ஒரு கேலிக்கூத்து. அப்படியொரு சமாதானம் இருக்கவில்லை. யுத்தநிறுத்தம் இருந்தாலும், உள்மட்டத்தில் பூசல்களும், சண்டைகளும் நடந்த வண்ணமே இருக்கின்றன. புலிகள் இன்னமும் வேண்டாதவர்களை கொலைசெய்துகொண்டே இருக்கிறார்கள். நாம் பிரதேச சுயாட்சியை நம்பவில்லை. இது நாட்டைத் துண்டுபோடும் ஒன்றேயல்லாமல், சுபீட்சமான நாடாக வர வழிவகுக்காது.

அரசு தமது அதிகாரங்களைக் கிராமந்தோறும் பிரித்துக்கொடுக்கவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் ஒன்று. இதை வலுவாகக் கண்டிக்கிறோம். இந்தப் பேச்சுவார்த்தை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடக்கும் ஒன்றாக இராமல், சகல அரசியற் கட்சிகளையும் அதில் பங்குபற்றச் செய்யவேண்டும். சகல அரசியற்கட்சிகளையும் ஒன்றாக்கிய பின்பே பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது சாலச்சிறந்தது.

நாம் நடுநிலையாகவும், சுதந்திரமாகவும், யாரையும் சாராமல் இயங்கவிரும்புகிறோம். 2004 ஆம் ஆண்டான தற்போதைய தேர்தலில் - ஜே.வி.பி. தேர்தல் பிரசார சட்டதிட்டங்களை பலதடவை துஷ்பிரயோகம் செய்துள்ளது. அண்மையில் காலஞ்சென்ற வண.சோமதேரரின் தாயார் ஜனாதிபதியிடம் தனது மகனின் மரணத்தைப் பற்றிப் பேசியிருந்தார். அதைப் பத்திரிகையாளர் மாநாட்டில் திரித்து, வண.சோமதேரரின் மரணத்தைப் பௌத்த பிக்குகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர்.

இந்தாலும் ஜே.வி.பி நல்லதொரு பிரேரணைக் கொண்டுவரும் பட்சத்தில் பகைமைகளை மறந்து நாம் ஒத்துழைப்பு நல்குவோம் என்றார்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில்

# சபாநாயகர் பதவிக்கு ரத்னசிறி விக்கிரமநாயக்க!

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் சபாநாயகர் பதவிக்காக பிரேரிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கான தீர்மானத்தை ஐக்கிய மக்கள் சதந்திர முன்னணி எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ரத்னசிறி விக்கிரமநாயக்கவைச் சபாநாயகராகத் தெரிவு செய்வதற்கு நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களின் ஆதரவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடியிருப்பதாகத் தெரியவருகிறது.

ரத்னசிறி விக்கிரமநாயக்க கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. இதனால் எதிர்வரும் 22 ஆம் திகதிக்குப் பின்னர் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

# தலைமன்னார் கடற்பகுதியில் கடற்படை சோதனை அதிகரிப்பு

தலைமன்னார் பியர் கடற்பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது அண்மைய சில நாட்களாக அப்பகுதியிலுள்ள கடற்படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், சில கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளனர்.

மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களது அடையாள அட்டைகள் கடற்கரைப்பகுதியில் வைத்து கடற்படையினரால் பரிசோதனை செய்யப்படுகிறது.

அத்துடன் தற்போது மீனவர்கள் மூன்று கடல்மைல்களுக்குள்ளேயே மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள முடியும். ஆனால் மீனவர்கள் ஆழ்கடலுக்குள் சென்று மீன்பிடிப்பதாக இருந்தால் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் முதல்நாளே தலைமன்னார் பியர் பகுதியிலுள்ள கடற்படை அலுவலகத்தில் மீன்பிடிப்படகின் இலக்கம், செல்லும் மீனவர் பெயர் அவரது அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை பதிய வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் குறைந்திருந்த படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அண்மைய சில நாட்களாக சகல இடங்களிலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)

# நாட்டின் ஒருமைப்பாடு தொடர்பாக சந்திரிகாவுடனான பேச்சு தோல்வி!

## ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஒருமைப்பாடு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு ஏற்படவில்லை என ஜாதிக ஹெல உறுமய அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

ஜனாதிபதியுடன் கடந்தவாரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

நாட்டின் ஒருமைப்பாடு தொடர்பாக மாத்திரமே பேச்சுவார்த்தை இடம்பெற்றது. ஆறு முக்கிய விடயங்கள் சம்பந்தமாக இந்தப் பேச்சுவார்தையின்போது கவனம் செலுததப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவாத்தை நடத்துவதாயின் அந்த அமைப்பை மாத்திரம் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என இந்தப் பேச்சுவார்த்தையின்போது வலியுறுத்தப்பட்டது.

இதற்காக பொதுத்தேசிய இணக்கப்பாடு ஏற்படவேண்டும். ஜனாதிபதி இதனை ஏற்றுக்கொண்டதாக ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் சிறந்த விடயங்களுக்கு மாத்திரம் தங்கள் கட்சியினால் ஆதரவு அளிக்கப்படும் என ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதிக்கு உறுதியளித்துள்ளது.

ஆயினும், கூட்டணி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு தாங்கள் தயார் இல்லை எனவும் ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த ஆறு மாதங்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்புக்கு திட்டம்

எதிர்வரும ஆறு மாதங்களுக்குள புதிய அரசமைப்பு சம்பந்தமாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்பு அரசியல் அமைப்புச் சபை ஒன்றை ஏற்படுத்தி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான சட்டமொன்றைத் தயாரிக்கவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆர்வமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆகியவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான, அபிவிருத்திப் பணிகளுக்கு அவுஸ்ரேலியா ஆதரவளிக்கும்!

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும், அபிவிருத்திப் பணிகளுக்கும் தமது அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயாஸ்தானிகர் எட்வேட் டின்ஸ் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

பிரதமருக்கும், அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை - பிரதமரின் பிரத்தியேக இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# 820 போராளிகள் சரண்!

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகரை மீட்பு நடவடிக்கையின் போது பெருமளவிலான போராளிகள் சரணடைந்துள்ளதாக களத்திற்குச் சென்று திரும்பிய நிருபர் ஒருவர் ஐரோப்பிய வானொலி ஒன்றிற்குத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை வாழைச்சேனைப் பகுதியில் சண்டைகள் ஆரம்பித்ததாகத் தெரிவித்த மேற்படி செய்தியாளர் - நேற்றைய வாகரை மீட்புத் தாக்குதலில் சிறியளவு உயிரிழப்பே ஏற்பட்டது எனவும் உயிரிழப்புக்கள் பாரிய அளவில் ஏற்படுவதைத் தடுக்கும் வகையிலே இந்தச் சண்டை முன்னெடுக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

எத்தனை பேர் சரனடைந்தார்கள் என்பதைப் பற்றிய செய்திகள் எதையும் விடுதலைப்புலிகள் வெளியிடாத போதும், போராளிகள் பரிமாறிக் கொண்ட தகவல்களின்படி, சுமார் 300 பெண் போராளிகள் உட்பட 820 போராளிகள் நேற்றுமுன்தினம் சரணடைந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமைகள் விசாரணைக்காக கம்பஹாவில் புலனாய்வு நிலையம்!

2003 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு வெலிக்கம்பிட்டிய எனும் இடத்தில் புலனாய்வு நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடாளுமன்றம் உட்பட வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்கள், இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவராலயங்கள், தேசிய சர்வதேச ஊடகங்கள் போன்றவற்றின பார்வையைத் திருப்புவதே இந்த நிலையத்தின் நோக்கமாகும்.

அத்துடன் அப்பகுதிகளில் இடம்பெற்ற சட்டவிரோத நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்த நிலையத்திற்கு அறிவிக்கும்படி கம்பஹா மாவட்ட மக்களிடம் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இங்கிலாந்துடனான 4 ஆவது டெஸ்ட் மேற்கிந்தியத் தீவுகள் வலுவான நிலையில்



இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் அன்ரிகுவாவில் நேற்று தொடங்கிய நான்காவதும் இறுதியுமான. டெஸ்ட் போட்டியல் மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைக் களைப்பெற்று ஸ்திரமான நிலையிலுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் லாரா தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் எனத் தெரிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 33 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் தனது முதலாவது விக்கெட்டை இழந்தது. இதில் டரன் கங்கா 10 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் ஆரம்பவீரர் கைல்லுடன் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக இணைந்த அணித்தலைவர் லாரா ஜோடி மிகச் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் கைல் 69 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் லாராவுடன் மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக இணைந்த சர்வான் ஜோடி மிகச்சிறப்பாக விளையாடி தமக்கிடையே 110 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

52 ஆவது ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் மழை வந்த காரணத்தால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. தற்போது ஆட்டமிழக்காமல் லாரா 86, சர்வான் 41 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்துவீச்சில் பிளின்டொப், பற்றி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். நடந்துமுடிந்த மூன்று போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வென்று தொடரைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கு எதிராக இதே மைதானத்தில் முன்னர் நடந்த போட்டியொன்றில் லாரா 375 ஓட்டங்களைக் குவித்ததும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் ரெனிஸ் செரீன் அதிர்ச்சித்தோல்வி

அமெரிக்கவில் உள்ள புளோரிடா நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற ரெனிஸ் போட்டி நடைபெற்றுவருகிறது. இதன் கால் இறுதியில் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சிகரமாக தோற்றார். ரஷ்யாவை சேர்ந்த நாடியா பெட்ரோவா 6-2 6-3 என்ற நேர் செட் கணக்கில் செரீனாவை தோற்கடித்து அரை இறுதிக்கு தகுதிபெற்றார்.

மற்ற ஆட்டங்களில் மவ்ரஸ்மோ (பிரான்ஸ்) 6-4, 6-3 என்ற கணக்கில் சில் சிலிவியாவையும், ஹெனின் (பெல்ஜியம்) 6-4, 6-3 என்ற கணக்கில் வெராவையும் டேவன் போர்ட் (அமெரிக்கா) 6-4, 6-1 என்ற கணக்கில் பவ்லாவையும் தோற்கடித்தனர்.

# விளையாட்டு

## மூன்றாவது டெஸ்டில் சமி ஆடுவது சந்தேகம்



பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர்களில் ஒருவரான முகமட்சமி முதுகுப் பகுதியில் ஏற்பட்டுள்ள வலியால் நாளை 3 ஆவது டெஸ்டில் ஆடுவது சந்தேகமே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிக்காக அவர் சிகிச்சைபெற்று வருவதாகவும், அவர் விளையாட வாய்ப்பு இருப்பதாகவும் பயிற்சியாளர் ஜாவிட்மியாண்டட் தெரிவித்தார்.

வீரர்களின் காயத்தால் பாகிஸ்தான் அணி திணறிவருகிறது.

வேகப்பந்து வீரர்களான உமர் குல், அப்துல் ரசாக், சபீர் அகமது மற்றும் மொயின்கான் ஆகியோர் காயம் காரணமாக ராவல்பிண்டியில் நடைபெறும் 3 ஆவது டெஸ்டில் விளையாடமாட்டார்கள் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், புதுமுக வேகப்பந்து வீச்சாளர்களான பைசல் அக்பர், அப்துல்ரவூப், ரானா நவீத், இப்திகார் ஆகியோருக்கு வாய்ப்பு கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

## டெல்கியில் 22 ஆம் திகதி ஷேவாக் - ஆர்த்தி திருமணம்



(புதுடெல்கி)

இந்திய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் வீரேந்தர் ஷேவாக். பாகிஸ்தானுக்கு எதிரான முதல்டெஸ்டில் இவர் 300 ஓட்டங்களை எடுத்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

ஷேவாக் டெல்கியை சேர்ந்த ஆர்த்தி சிங்கை காதலித்து வந்தார். கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அவர்களது திருமண் நிச்சயதார்த்தம் நடந்தது.

பாகிஸ்தான் சுற்றுப் பயணம் முடிந்த பிறகு ஷேவாக் திருமணம் செய்துகொள்கிறார். பாகிஸ்தான் பயணத்தை முடித்துக்கொண்டு இந்திய அணி எதிர்வரும் 18 ஆம் திகதி நாடு திரும்புகிறது.

ஷேவாக் - ஆர்த்திசிங் திருமணம் எதிர்வரும் 22 ஆம் திகதி டெல்கியில் நடக்கிறது. மத்திய சட்ட அமைச்சரும் டெல்கி மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவருமான அருண்ஜேட்லிக்கு சொந்தமான பங்களாவில் இந்தத் திருமணம் நடைபெறுகிறது.

முக்கிய வி.ஐ.பிக்கள் மட்டுமே இந்த திருமணத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. டெல்கி புறநகர் தொகுதியில் போட்டியிடும் தொழிலாளர் அமைச்சர் சாகிப்சிங் வர்மாவுக்கு ஆதரவாக ஷேவாக் தேர்தல் பிரசாரம் செய்வார் என்று அவரது தந்தை ஏற்கனவே கூறியிருந்தார்.

## பாடசாலை மட்டகிரிக்கெட் இன்று அரை இறுதியாட்டம்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக் கிடையில் கோட்ட ரீதியாகவும், பின்னர் வலயரீதியாகவும் நடைபெற்ற போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்துக் கிரிக்கெட்போட்டியின் அரை இறுதியாட்டங்கள் இன்று காலை 8.30 மணிமுதல் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், இரண்டாவது அரையிறுதியாட்டதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியினை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மோதவுள்ளன. (58)

## சதுரங்கப் போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான 19 வயதுப் பிரிவு ஆண்கள் சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இப் போட்டிகளில் முதலாம் இடத்தை யாழ்.ஹாட்லிக் கல்லூரி அணியும், இரண்டாம் இடத்தை யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் பெற்றக்கொண்டன.

போட்டியில் வெற்றிபெற்ற மேற்படி இரண்டு அணிகளும் யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள சதுரங்கப் போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (12)

## கலைஞர் கருணாநிதி

# முத்தமிழ் வித்தகரா? முத்தமிழ் வித்தவரா!

தி.மு.க.தலைவர் கருணாநிதியை முத்தமிழ் வித்தகர் என்று கூறக்கூடாது. அவரை முத்தமிழ் வித்தவர் என்று கூறுவதுதான் பொருத்தமானது. என்று தமிழக பா.ஜ.க.பொதுச் செயலாளர் எச்.ராஜா கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் -

வெளிநாட்டில் பிறந்தவர்கள் இந்தியாவின் உயர் பதவிக்கு வரக்கூடாது என்று தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வரைவுத் தீர்மானத்தில் கருணாநிதி கையெழுத்துப் போட்டுள்ளார்.

அதுவும் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டுள்ளார் அவரைப் போய் முத்தமிழ் வித்தகர் என்று கூறுகிறார்கள். முத்தமிழ் வித்தவர் என்றுதான் கருணாநிதியைக் கூறவேண்டும். அதுதான் பொருத்தமாக இருக்கும் என்றார் ராஜா.

## கார் மரத்தில்மோதி விபத்துக்குள்ளானதில் முன்னாள் முதலமைச்சர் கவலைக்கிடம்!



(ராய்ப்பூர்)

சத்தீஷ்கார் மாநில முன்னாள் முதலமைச்சர் அஜித்ஜோகி, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இவர் சட்டசபை தேர்தலின்போது, பாரதீய ஜனதா சட்டசபை உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுத்து ஆட்சி அமைக்க முயன்றதாக கூறப்பட்டது.

இதையடுத்து, கட்சியில் இருந்து அஜித் யோகி இடைநிறுத்தம் செய்யப்பட்டார். நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அவர் மீதான இடைநிறுத்த உத்தரவு ரத்துச்செய்யப்படடது.

சததீஷ்கார் மாநிலம் மகாசாமுண்டு தொகுதி காங்கிரஸ் வேட்பாளராகவும் அஜித்யோகி அறிவக்கப்பட்டார். அவரை எதிர்த்து முன்னாள் காங்கிரஸ் தலைவர் வி.சி.சுக்லாவை பாரதீய ஜனதா வேட்பாளராக நிறுத்தியுள்ளது.

நேற்று அதிகாலை மகாசாமுண்டு தொகுதியில் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக அஜித் யோகி காரில் சென்றுகொண்டு இருந்தார்.

ராய்ப்பூரில் இருந்து 140 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காரியாபாண்டு என்ற இடத்தில் சென்றபோது கார் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. இதில் வீதி ஓரத்தில் இருந்த மரத்தின் மீது கார் மோதியது.

இந்த விபத்தில் அஜித் யோகி படுகாயம் அடைந்தார். அவரது தலை, முதுகு, கைகள் மற்றும் இடுப்பு ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. இதையடுத்து, ராய்ப்பூரில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அஜித்யோகிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர் இன்னும் அபாய கட்டத்தை தாண்டவில்லை. உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

# பாரதீய ஜனதாக் கட்சிக்கே எனது முழுமையான ஆதரவு

## நடிகர் ரஜினிகாந்த் தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் யாருக்குத் தான ஆதரவு என்பதைத் தெரிவிக்க நடிகர் ரஜினி காந்த் - பத்திரிகையாளர்கள் கூட்டத்தை நேற்று ராகவேந்திரா கல்யாண மண்டபத்தில் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் அவர் கூறிய பரபரப்பான கருத்துக்கள் -

இப்பொழுது முக்கியமான கட்டத்துக்கு வருகிறேன். ஒவ்வொரு முறையும் தேர்தல் வரும்பொழுது - அது நாடாளுமன்றத் தேர்தலாகட்டும் அல்லது சட்டமன்றத் தேர்தலாகட்டும், என்னுடைய ஆதரவு யாருக்கு என்ற கேள்வி எழுகிறது. இந்த முறையும் அந்தக் கேள்வி எழுந்துள்ளது. நான் தெளிவாக சொல்ல விரும்புகிறேன். பல காரணங்களுக்காக இந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்னுடைய ஆதரவு யாருக்கும் இல்லை.

ஆனாலும், நான் ஒன்றை மட்டும் சொல்லியாகவேண்டும். என் அன்பார்ந்த தமிழக மக்களே இப்பொழுது நமது நாட்டிலே தலைவிரித்தாடிக்கொண்டிருக்கும் பிரச்சினை தண்ணீர்ப் பிரச்சினை. ஏழைகள், பணக்காரர்கள், மிருகங்கள், பறவைகள் என இப்பொழுது அனைவரும் தவித்துக்கொண்டிருப்பது தண்ணீருக்காக.

நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்திய நாட்டில் உள்ள அனைத்து நதிகளையும் இணைத்தால்தான் இந்தக் கடுமையான தண்ணீர்ப் பிரச்சினை தீரும். நமது நாட்டிலுள்ள தண்ணீர்ப் பஞ்சத்தை நீக்க இந்த ஒரே வழிதான் உள்ளது. குறிப்பாக நம் நாட்டு நதிகளை இணைக்காவிட்டால் மிகவும் பாதிக்கப்படப்போவது தமிழ் நாடுதான். ஏனென்றால், நம்மைச்சுற்றி உள்ள மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்நாடகா எல்லாம் பல ஜீவநதிகள் உள்ளன. ஆனால், தமிழ் நாட்டில் தண்ணீர் சுமந்து வரும் எந்த ஜீவநதியும் இல்லை.

நம் நாட்டு நதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்தினால் இதற்கு ஒருகோடி ரூபாய் கொடுக்கிறேன் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இது அனைவரும் அறிந்த விடயமே.

மத்தியில் அமையும் ஆட்சிதான் நம் நாட்டு நதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும்.

இந்தத் தேர்தலில் தமிழ் நாட்டில் எந்த கூட்டணிக்கு எவ்வளவு ஆசனம் கிடைக்கப் போகிறதோ எனக்குத் தெரியாது. ஆனால் இந்த தேர்தலில் மத்தியில் அமரப்போவது வாஜ்பாய் தலைமையிலான அரசுதான்.

என்னைப்பொறுத்தவரையில் இந்திய நாட்டின் முக்கியபிரச்சினையான தண்ணீர்ப் பிரச்சினைக்கு யார் தீர்வு காண்கிறார்களோ அவர்களுக்கே என் வாக்கு என அவர் மேலும் தெரிவித்தார்.

# விவசாயிகளின் நல்லதொரு எதிர்காலத்துக்காக

# கமநல நிலையங்களுடன் தொடர்பை வையுங்கள்

## விவசாய உதவி ஆணையாளர் சுந்தரேசன்

(உடுவில்)

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு இனிவருங்காலங்களில் நல்ல எதிர்காலம் உள்ளது. புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் பட்சததில் விவசாயிகள் தமது விளை பொருட்களை கூடிய நிலைக்கு விற்க வாய்ப்பு உள்ளது. எனவே நீங்கள் உங்கள் பகுதி விவசாய சேவை நிலையத்துடன் நெருங்கிய தொடர்பை பேணிக்கொள்ள வேண்டும. உங்கள் நன்மைக்காகத் திறக்கப்பட்டுள்ள இந்த விவசாய உள்ளீடுகள விற்பனை நிலையத்தைத் தகுந்த முறையில் உபயோகித்து அதிக பலனைப்பெறவேண்டுமென யாழ். மாவட்ட விவசாய உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்தார்.

விவசாய சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

தென்பகுதியிலுள்ள கல்முனைப் பிரதேச விவசாய சேவைத் திணைக்களம் ஒரு போகத்திற்கு 10 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்குகிறார்கள். இதனை அந்தப் பகுதி விவசாயிகள் தகுந்த முறையில் பெற்றுப் பயனடைந்து கடனை மீளச் செலுத்துகிறார்கள். அதே போல எங்கள் பிரதேசத்திலும் விவசாய சம்மேளனத்தின் சிபார்சின் பேரில் ஒரு விவசாயி 15 ஆயிரம் ரூபாவையும், உதவி ஆணையாளரின் சிபார்சுடன் 5 இலட்சம் ரூபாவையும் கடனாக 12 வீத வட்டிக்குப் பெறமுடியும். ஏனைய வங்கிகளைப் போல போட்டிபோட்டு எம்மால் கடன் வழங்க முடியாது. ஒரு பகுதி பணமாகவும் மறுபகுதி விவசாய உள்ளீடுகளாகவும் கடன் வழங்கப்படும். அத்துடன் விவசாய சம்மேளனத்தின் சிபார்சில் சந்தையில் வியாபாரம் செய்பவர்களுக்கு உடனடிக் கடன் வழங்கப்படும் இதைக் காலயில் பெற்று ஒரு சிறுதொகை வட்டியுடன் மாலையில் திருப்பிச் செலுத்த முடியும். விவசாய உள்ளீட்டு விற்பனை நிலையம் அதிகாலை முதல் இரவுவரை திறந்திருந்து சேவையாற்றினால் விவசாயிகள் தமக்கு வேண்டிய நேரத்தில் வந்து தமது தேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். (101)



யு.என்.எச்.சி.ஆரின் நிதி அனுசரணையுடன் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் நடாத்தப்பட்ட பெண்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வில் நடைபெற்ற கண்காட்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.எஸ். அருளானந்தம் மங்கள விளக்கேற்றி, நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், யாழ்.சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் கு.வி.நிஷாந்தன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மின்கம்பத்துடன் லொறி மோதியது

இணுவில் லஷ்சுமி திரையரங்குக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியை வீதிக்கு எடுக்க முற்பட்டபோது, கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிய லொறி அருகே இருந்த உயர் அழுத்த மின்கம்பத்துடன் மோயது, இதனால், மின்கம்பம் முறிந்து விழுநது மினகம்பிகளும் அறுந்து வீழ்ந்த போதிலும், தெய்வாதீனமாக எவருக்கும் ஆபதது எதுவும் நிகழவில்லை. (64)

## தமிழ் - சிங்கள புத்தாண்டு நிகழ்ச்சிகள்

தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு, 513 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய 2 ஆவது புலனாய்வு இராணுவப் பிரிவும், 19 ஆவது இலங்கை பாதுகாப்பு இராணுவப் பிரிவினரும், 513 ஆவது படைப்பிரிவு அதிகாரிகளும் சேர்ந்து நடத்திய புதுவருட நிகழ்ச்சி கடந்த வியாழக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக 514 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியும், உடுவில் பங்குத்தந்தை அனோல்ட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# படையினர் நடத்தும் போட்டிகளில் கலந்துகொள்ளக்கூடாது!

## சுவரொட்டிகள் மூலம் எச்சரிக்கை

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு படையினரால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பொதுமக்கள் எவரும் கலந்துகொள்ளக்கூடாது எனக்கோரும் சுவரொட்டிகள் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளது.

முக்கிய சந்திகள், பொதுஇடங்கள் மற்றும் நகர்ப் பகுதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் தமிழ் - சிங்களப் புத்தாண்டையொட்டி பல்வேறு நிகழ்வுகளை நடத்துகின்றனர்.

இந்தப் போட்டிகளில் தனிநபர்களோ, விளையாட்டுக்கழகங்களோ ஈடுபடக்கூடாது. இதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கை விடுக்கும் துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது. (202)

# புதுவருடத்தை முன்னிட்டு

# யாழ்.நகரின் சில வீதிகளில் வாகனங்கள் நிறுத்தத் தடை

காங்கேசன்துறை வீதியிலிருந்து, ஆரம்பிக்கும் மின்சார நிலைய வீதி புதுவருடத்தை முன்னிட்டு தற்காலிகமாக வாகனப் போக்குவரத்துக்கு நிறுத்தப்பட்டுள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டு, யாழ். நகரப் பகுதியில் மக்கள் கூட்டம் அலை மோதுவதனால், விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு, காங்கேசன் துறைவீதியில் இருந்து, ஆரம்பிக்கும் மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதிவரை வாகனப் போக்குவரத்து முற்றாகப் பகல் வேளைகளில் நிறுத்தப்பட்டுள்ளது.

இவற்றைவிட யாழ்.நகரை அண்டிய முக்கிய சந்திகள் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவற்றைவிட பொலிஸார் சாதாரண உடையிலும் கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

# சிறுதானிய பயிர்ச்செய்கை தென்மராட்சியில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் சிறுதானியப் பயிர்ச்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. காலபோக நெல் அறுவடை முடிந்ததும் - பயறு, உழுந்து, கௌப்பி போன்ற சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவது இந்தப் பிரதேச விவசாயிகளது வழக்கமாகும்.

இந்த வருடம் மழைவீழ்ச்சி போதாமையால், காலபோக நெற்செய்கையின் பின் வயல் நிலங்களில் ஈரலிப்புத்தன்மை காணப்படாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இந்தப் பகுதி மக்களது தொழில் முயற்சியும், வருவாயும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. (24)

## கடனடிப்படையில் மின்சார உபகரணங்கள்

(கொழும்பு)

பிறவுண் அன் கம்பனியின் வர்த்தகக் கண்காட்சி ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மின்சார உபகரணங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டதுடன் அலுவலக ஊழியர்களுக்கு 18 மாத கடனடிப்படையில் பொருட்களும் வழங்கப்பட்டன. (110)

# சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்ய யுனிசெப் நிறுவனம் தொடர்ந்து உதவவேண்டும்

## சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்.குடாநாட்டின். பொது சுகாதார சேவைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு யனிசெப் நிறுவனம தொடர்ந்து உதவிகளை வழங்கவேண்டுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவபாதசுந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜபபானிய அரசின் நிதியுதவியின் கீழ், யுனிசெப் அமைப்பினால், யாழ். மாவட்டப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாகக் கையளிக்கப்பட்டது. தாய் - சேய் நலத்திட்டத்தின்கீழ் வெளிக்களப் பணிகளை மேற்கொள்வதற்கென, ஜப்பானிய அரசின் நிதியுதவியின் கீழ், யுனிசெப் அமைப்பு 46 மோட்டார் சைக்கிள்களை வழங்க முன்வந்திருந்தது. அவற்றில் முதற்கட்டமாகவே 39 மோட்டார் சைக்கிள்கள் நேற்று வைபவரீதியாகக் கையளிக்கப்பட்டது. யாழ்.வைத்திய சாலை வீதியிலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யுனிசெப் அமைப்பின் வெளிக்களத் தலைமை அதிகாரி ஜூடித் புறுனோ - யாழ்.செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் - எஸ்.சிவபாதம் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவபாதசுந்தரம், யுனிசெப் அமைப்பின் அதிகாரி ஏ.ஸ்ரீஸ்கந்தராசா, பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

யாழ்.செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவபாதம் மற்றும் ஜூடித் புறுனோ ஆகியோர் - மோட்டார் சைக்கிள்களுக்கான ஆவணங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் கையளித்தனர்.

நிகழ்வில் கலந்துகொண்டு, உரையாற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சிவபாதசுந்தரம் தெரிவித்ததாவது - பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்களால் அவர்களது பணிகள் துரிதமடையும். இதன்மூலம், சுகாதார சேவைகள் பெரும் முன்னேற்றமடையும். நீண்டகாலமாகப் பரிசோதகர்கள் துவிச்சக்கர வண்டிகளிலேயே பயணித்து, தமது பணிகளை முன்னெடுத்து வந்தனர். பின்தங்கிய கிராமங்களில் முழுமையான சேவைகளை அவர்களால் ஆற்றமுடியாதிருந்தது. எனினும், இனி வரும் காலங்களில் அவ்வாறான குறைகள் காலப்போக்கில் நீங்கிவிடுமென எதிர்பார்கின்றேன். இதனை உணர்ந்து அவர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென அழைப்பு விடுக்கிறேன் எனத் தெரிவித்தார். (202)

## இலவச ஓவியப் பயிற்சிப் பட்டறை

விடுமுறை காலத்தை மாணவர்கள் பயனுள்ளதாக்க சித்திரப் பயிற்சி நிறுவனமான ஐ.ஏ.ரி இளம் ஓவியக் கலைஞர்களை ஒன்றிணைத்து, இலவச ஓவியப் பயிற்சிப்பட்டறையை இந்த மாதம் 14, 15, 16 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடாத்தவுள்ளது. இதில் தரம் 7 இற்கு மேற்பட்ட மாணவர் கள் பங்குபற்ற முடியும். பயிற்சி முடிவில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்படும் என நிறுவ..த்தின் இயக்குநர் தெரிவித்தார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : அ.அமல ஆன்ஸ்
முகவரி : 11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

### இரண்டாவது அகவையில்



பெயர் : உ.கவிநிலவன்
முகவரி : 48, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

### இரண்டாவது அகவையில்



பெயர் : சி.பிரணவி
முகவரி : ஊறணி குடியேற்றம்.

### மூன்றாவது அகவையில்



பெயர் : சி.கீர்த்திகா
முகவரி : ஊறணி குடியேற்றம்.

### நான்காவது அகவையில்



பெயர் : செ.டனோஜன்
முகவரி : 86, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## தேர்ச்சி அறிக்கை வழங்கலும் பெற்றோர் சந்திப்பும்

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்திலுள்ள யாழ்.கல்வி நிலையத்தின முதலாம் தவணைக்கான தோச்சியறிக்கை வழங்கலும், பெற்றோர் சந்திப்பும் இன்று நடைபெறவுள்ளது.

தரம் - 9,10,11 இல் கற்போருக்கு, காலை 8 மணிக்கும், தரம் - 6,7,6 இல கற்போருக்கு, மாலை 3.30 மணிககும், தரம் - 1 முதல் 5 வரையான வகுப்புக்களில் கற்போருக்கு மாலை 5 மணிக்கும் தேர்ச்சியறிக்கைகள் வழங்கப்படவுள்ளதாக - கல்வி நிலைய நிர்வாக இயக்குநர் எஸ்.சுபநாதன் அறிவித்துள்ளார்.








சிறுகதை

# காற்றும் கனக்கும்

லெஸ்லி

"சீ என்ன வாழ்க்கை இது"

யோசித்து யோசித்து இந்த முடிவுக்குத்தான் வந்து விட்டேன். இந்த இயந்திர வாழ்க்கை சலித்துவிட்டது. எத்தனை நாட்களுக்குத்தான் இந்த சப்பென்ற வாழ்க்கை. எதிலும் விருப்பமில்லை. எதன்மீதும் அக்கறை இல்லை. ஏன்! என்னிற்கூட அக்கறை இல்லை" எப்போதும் விரக்தி நிறைந்த இயந்திர வாழ்க்கை சலித்துவிட்டது.

எத்தனை வேளைச் சாப்பாடுகள். சாப்பிட்டது தெரியாமலும் சாப்பிடாமலும் நழுவிப்போயுள்ளன.

காலை ஆறு மணிமுதல் நான்கு மணிவரையும் லண்டன் விம்பிள்டன் நகரத்திலுள்ள "சுப்பர் மாக்கெட்டில்" சுற்றிவிட்ட பம்பரம்போல் வேலை. வாடிக்கையாளர் எடுத்துச்சென்ற பொருட்களின் மீதியை அடுக்கிவைப்பதுதான் எனது வேலை. இப்போதெல்லாம் ஞாபகம் வருவது நான் படித்த காலத்தில் கொப்பிகளை, புத்தகங்களை பேசிப்பேசி அம்மா அடுக்கி வைப்பது. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு தனக்கு வந்தால்தான் தெரியும். பிறகு ஆறுமணிக்கு 'பெற்றோல் செற்றில்' அடுத்த வேலை என்பதால் அவசரத்தில் அகப்படும் பஸ்ஸில் ஏறி ஒரு குரங்குத்தாவல்.

கடைசி ஒரு மணித்தியாலங்கள் கழிவதற்குள் எனது கைக்கடிகாரமும் கண்களும் அடிக்கடி சந்தித்துக்கொள்ளும். கைக்கடிகாரத்துக்கும், எனக்கும் இடையேயான இந்தக் காதல் தினமும் மூன்று மணிக்கே ஆரம்பித்துவிடும். ஆனால் அது தன்வேலையை அமைதியாகச் செய்யும். அது என்ன என்னைப் போன்ற மனிதனா? அவசரப்படுவதற்கு. பெற்றோல் நிரப்பும் பகுதிகளுக்குள் நுழைந்தால் எல்லோரும் என்னையே பார்ப்பதாக ஒரு எண்ணம். "ஹலோ சுதன் மற்றவேலை முடிஞ்சுதா"? கேட்கின்றார்கள். முடியாமலா இங்கு வந்துள்ளேன் பொங்கி எழும் எரிச்சலை அடக்கச் சொல்லும் மனம். இதை மட்டும் தான் கேட்கின்றார்கள். இவர்களுக்கு வேறு ஏதும் கேட்கத் தெரியாதா? சாப்பிட்டாயா? சந்தோஷமாக இருக்கின்றாயா? இவர்களுக்கு ஒரு நாளும் கேட்கத் தோன்றவில்லை. அவர்கள் இருக்கும் நிலைமையில் எனது நிலைமை பற்றிச் சிந்திக்கத் தோன்றுமோ, என்னவோ?

அவர்கள் கேட்டாலும் எனது பிரச்சினை தீர்ந்துவிடப்போகுதா என்ன?

"தம்பி எல்லோரும் வீட்டை இடித்துக்கட்டினம். பெட்டைக்கும் வயது ஏறிக்கொண்டு போகுது. வீட்டையும் திருத்தி அவளையும் ஒரு கரையில விடவேணும். ஒரு ஐந்து இலட்சம் அனுப்பு"

'சின்னவன் கீறோகொண்டா மோட்டார் சைக்கிள் வேணுமாம் இராணியின்ரை மூத்தவன் காசு அனுப்பி அவையும் வேண்டிப்போட்டினம். இரண்டு லட்சம் அனுப்பு'

அம்மாவின் கடிதம் முடியும்போது இப்படித்தான் முடியும்.

"என்ர மகன் இலண்டனில இரண்டு வேலை பார்க்கிறான்" என்று ஊரில உள்ள பெண்களோடு கதைத்து வெளிப்படுத்துவதற்கு நான் இலண்டனில் இருப்பது ஒரு நல்ல ஆயுதம். உயிரையே உறையவைக்கும் பனிவிழும் பொழுதுகளில் மூன்று பேருந்துகள் மாறிப் பயணிப்பதும் நடுங்கும் கால்களுடன் வீதியைக் கடப்பதும் யாராவது தெரிந்தவர்கள் என்னுடன் படித்தவர்கள், காரிற்குப் பெற்றோல் நிரப்ப வந்தால் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அந்த நேரம் நான்படும் அவஸ்தையும், அவர்கள் என்னை ஏளனமாக பார்ப்பதாக எண்ணிக் குறுகிப்போவதும் அவளுக்கு எப்படித் தெரியும்?

'சுப்பர் மாக்கற் நான் சட்டப்படி வேலை செய்யும் இடம். ஆனால் "பெற்றோல் செற்" வரி கட்டுவதைத் தவிர்ப்பதற்காக பதிவுகள் எதுவுமின்றி வேலை செய்யுமிடம். இங்கு வேலைக்கு வந்ததன் காரணமே முதலாவது வேலை. மற்றது பெற்றோல் அடிக்கும் வெள்ளைகள் "ரிப்ஸ்" தருவார்கள் என குமார் அண்ணன் சொன்னதுதான்.

இங்கு வந்தது முதல் எத்தனை ஆயிரம் ரூபாக்களை கஸ்ரப்பட்டு உழைத்து இந்த நாட்டுக்கு தாரைவார்த்திருப்பேன்.

அநேகமாக இங்கு சனிக்கிழமைகளில்தான் சம்பளம் கிடைக்கும். சனிக்கிழமைகளில் வேலை முடிந்தாலும் ஏதாவது செய்து நேரத்தை போக்கிக்கொண்டு இறைச்சி எலும்பிற்காய் காத்திருக்கும் நாய்போலக் காத்திருப்பேன்.

"சேர் சால் ஐ ரேக் மை சலறி" என நாக்கு நுனிவரை வந்த வார்த்தைகள் சொல்லிக்கொள்ள முடியாமல் வயிற்றுக்குள் குதித்துத் தற்கொலை செய்துகொள்ளும். நான்படும் அவஸ்தையை பார்த்து அவருக்கு சம்பளம் பற்றியஞாபகம் வர,

"சலறி" என்று சொல்லி விட்டு உள்ளே செல்வது நெஞ்சில் பால்வார்த்தது போல் இருக்கும்.

அப்படி ஞாபகம் வரவில்லை என்றால் எதையோ இழந்த வெறுமை உணர்வுடன் வெளியேறிவிட வேண்டியதுதான். "விழுந்தவன் மீசையில் மண்படவில்லை" என்பது போல் அடுத்த கிழமை சேர்த்து வாங்கலாம் என எனது மனம் என்னைத் தேற்றிக்கொள்ளும்.

சம்பளத்தை தந்துவிட்டால் "தாங்ஸ்" என்று சொல்லிவிட்டு அப்படியே பொக்கற்றுக்குள் திணிப்பேன். கணக்குப் பார்த்து எண்ணி சம்பளத்தை வாங்கும் ஒருவன் நான் அல்ல என்பதை காட்டிக் கொள்ளவே இந்தச் செயல். வீதிக்கு வந்ததும் சம்பளத்தை எண்ணிப்பார்த்து வேலை மணித்தியாலங்களைக் கணக்குப் பார்ப்பேன். மகாராணியின் படம் போட்ட கண்ணாடித்தாள் என் கைகளிற்குள்ளே படபடக்கும்.

எனது நாட்டுப் பெறுமதியை எண்ணிப்பார்ப்பேன். வெளிநாடுகளில் வாழ்கின்ற போது, எமது கலாசாரத்தையோ? பண்பாட்டையோ கைவிட்டாலும், ஏன் எமது நாட்டை எமது உறவுகளின் செல்லரித்த வாழ்க்கையை நாட்டுக்காக தம்மையே தியாகம் செய்யும் எம் வீரமறவர்களை எண்ணிப்பார்க்காத ஒரு சிலர் கூட, கிடைக்கும் சம்பளத்தை எமது நாட்டுப்பணப் பெறுமதியில் கணக்குப்பார்க்கத் தவறமாட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலாவது எமது மண்ணின் நினைவுகள் வருவதே கோடி புண்ணியம்.

ஒரு கணம், படும் துன்பங்களை மறந்து சிரிப்பேன். நான் சம்பாதிக்கிறேன். இல்லை சம்பாதித்துக் கொடுக்கிறேன். பொக்கற்றினைத் தொட்டுப்பார்ப்பேன். நான் இப்ப பெறுமதியானவன். ஆனாலும் இது ஒரு சில நாட்களுக்குத்தான்.

பின்னர் இலங்கைக்குப் பணமனுப்பும் முகவர் நிலையத்தை நோக்கி எனது கால்கள் நடக்கும். அங்கு நிற்கும் பல இளைஞர்களுள் நானும் ஒருவன். அவர்களது நெருடல்கள் என்னவோ சம்பளம் கைமாறும், ஒரு தொகை அம்மாவுக்கு. மற்றொரு சிறு தொகை என்னவளுக்கு. கனத்த பொக்கற் மெலியும். கையில் ஒரு முந்நூறு 'பவுன்ஸ்" மிஞ்சும். அடுத்த சம்பளம் கிடைக்கும் வரை எனது அத்தனை செலவுகளும் அதற்குள்தான்.

வரும் வழியில் யாராவது தெரிந்தவர்களைக் கண்டால் சம்பாசனை தொடரும். அதுவும் இப்போதுதான் பலர் "ரூரிஸ்ற் விசாவில்" வருகின்றார்கள். ஊர் நிலை எப்படியாம். எலக்ஷனில் யார் வருவார்களாம்? எனக்குத் தெரியும். அவர்களது பதில் "உள்ள மாதிரித்தான்" பின்னர் ஏன் கேட்டேன். கேட்க வேண்டும் என்பதற்காகவா? வாழ்வில் இப்படி எத்தனை விடயங்கள். நடைமுறைக்காக?

பணத்தை அனுப்பிவிட்டு வீடு திரும்பும் போது, அம்மாவின் சிரித்தமுகம் தோன்றும். வீடு இடித்துக் கட்டப்பட்டு புதிதா வடிவமைக்கப்பட்டு புதிய நவீன கேற்றும் போடப்பட்டிருக்கும். தம்பி மோட்டார் சைக்கிளில் ஊரைவலம் வருவான். தங்கை "ஹான்ட்போனில்" "ஹலோ" சொல்வாள். சாய்மனைக் கதிரையில் இருந்து அப்பா ஆங்கிலப்பத்திரிகையைப் பார்ப்பார். தனது மூன்று பிள்ளைகளையும் இழுத்தபடி, மாதமொரு முறை விஜயம் செய்யும் அக்காவின் கைகளிற்குள் அம்மா ஒரு சில ஆயிரங்களைத் திணிப்பதாக ஒரு காட்சி.

எந்தக் காட்சி என்பது அம்மாவின் கடிதம் கிடைத்தவுடன் உறுதிசெய்யப்பட்டுவிடும்.

எதை எழுதக்கூடாது எதை எழுதுவது என்ற விவஸ்தையே அம்மாவுக்குத் தெரியாது.

அம்மாவுக்கு சந்தோஷமாக எழுத எதுவும் வராதோ? அல்லது கடந்த கால இடப்பெயர்வு ஏற்படுத்திய தழும்புகள் இன்னும் ஆறவில்லையோ? நான்படும் கஸ்ரங்கள் பற்றி ஏதாவது இருந்தாலும் பரவாயில்லை. அது அவளுக்கு எப்படிப்புரியும். அம்மாவின் பார்வையில் வெளிநாடு என்றால் ஏதோ சொர்க்க பூமி. நான் செய்வது ஏதோ கௌரவமான உத்தியோகம். இலட்சம் இலட்சமாக சம்பளம்.

நான் எதிர்பார்க்கும் எதுவுமே கடிதத்தில் எழுதப்பட்டிருக்காது. இதனால் தானோ அம்மாவின் கடிதம்வரும் போதெல்லாம் ஒரு இனம்புரியாத சலிப்பு.

வேலை முடிந்ததும் ஜனசஞ்சாரமற்ற விம்பிள்டன் நகர வீதியிலே நான் மட்டும் நடப்பேன். உறங்குவதற்கு கிடைக்கும் சில மணித்தியாலங்களையும் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற தவிப்பு என்நடையில் தெரியும். அதிகாலை வேலை என்ற சுமையில் நித்திரையே சுமையாகிவிடும்.

அறைக்குள் நுழைந்தால் நண்பர்கள் புட்டிகளுடன் அமர்ந்திருப்பார்கள். அவர்களது பேச்சில் அர்த்தமிருக்காது. உடனே ஞாபகம் வரும். நாளை ஞாயிற்றுக்கிழமை. வேலை இல்லை. ஆனால் அது அவர்களுக்கு மட்டும்தான். அன்றுதான் எனக்கு அதிகப்படியான வேலை. உடுப்புத் தோய்ப்பது, முகச்சவரம் செய்வது அம்மாவுக்கு கடிதம் எழுதுவது. அவளைப் பற்றிச் சிந்திப்பது எல்லாமே ஞாயிற்றுக்கிழமையில்தான். உண்மையில் ஞாயிற்றுக்கிழமைகளில் தான் எனக்காகவும் ஒரு சில நிமிடங்களைச் செலவளிக்கின்றேன்.

என்னைக்கண்டதும் என்ன சுதன் வேலை முடிஞ்சுதா? அவனுக்கென்ன அந்த மாதிரி உழைப்பு என்பார்கள்.

என்நிலைமை அவர்களுக்குப் புரியுமா? இந்தக் கடின உழைப்புக்குப் பின்னால் என்முதுகை உறுத்தும் சுமைகள் இவர்களிற்குப் புரியுமா? எனது நிலைமை உணராது கதைப்பவர்கள் அவர்களை என்னால் என்ன செய்யமுடியும்?

இருக்கப்பிடிக்காமல் வீதியை நோக்கி நடப்பேன். பனிக்குடம் தாங்கும் சைப்பிரஸ் மரங்களிற்குக் கீழே, கார்களிற்குள் ஒன்றாய் அமர்ந்திருக்கும் ஜோடிகள். பனிப்புகாரிற்கிடையே சாம்பல் உருவங்களாய்த் தெரியும்.

என்னவளை எண்ணிப்பார்ப்பேன்.

கம்பஸில் படித்த ஞாபகங்கள் தாலாட்டும். "ஸ்ரோன் பெஞ்சில்" கன்ரீனில் அமர்ந்திருந்து பேசிய பசுமையான அந்த ஞாபக நீரோடை சற்றெனச் சலிக்கும். இலங்கையிலிருந்து வெளிநாடு என நான் வெளிக்கிட்ட அந்த நாளில் அவளது கண்கள் எனது மௌனத்தைச் சிறைப்பிடிக்க, வார்த்தைகள் வரமுடியாமல் அவளது நயனங்கள் உதிர்ந்த முத்துக்கள் என்னை நனைக்கும்.

காலையில் எழுந்தவுடன் பல்வேறு எண்ணங்களில் மனம் அலையும். வேலை பற்றிய எண்ணங்கள் என்னையே புரட்டி எடுக்கும். பல்துலக்க 'பாத்றூம்' போனால் மாட்டியிருக்கும் கண்ணாடியில் முகத்தின் கன்றாவித் தோற்றம் தெரியும். ஒரு முறை தலையை அசைத்துப் பார்ப்பேன். வடிவாக உள்ளதா? வயசுபோய்விட்டதா?

அன்றைய நிகழ்வுகளை எல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது மிஞ்சும் சலிப்பில் மனம் தீர்மானம் எடுக்கும்.

"சீ என்ன வாழ்க்கை இது"

கீழ்வானில் சூரியன் மெல்ல மெல்ல ஏறிக்கொண்டிருப்பான். மனதில் தைரியம் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருக்கும்.

உடலின் ஒவ்வொரு அணுவினையும் குத்தியிழுக்கும் குளிரில் "யக்கற்றுடன்" விண்வெளிக்குச் செல்லும் வீரன் போல் விம்பிள்டன் நகர வீதியிலே எனது வழமையான பயணம் தொடரும்.

இன்றைய விடியலுடன் எனது இயந்திர வாழ்க்கைக்கு மூன்று வயது முடிந்து நான்கு வயதாகிறது.

# நூல் அகம்




அலை இதழ் வெளியீட்டு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். 1975 ஆம் ஆண்டின் சஞ்சிகை வரலாற்றின் புதிய வரவாக 1975-76 காலப்பகுதிகளில் அலை கலை இலக்கிய சஞ்சிகை வெளிவந்து கொண்டிருந்தது.

'அலை கலை' இலக்கிய சஞ்சிகையில் புதிய விடயம் ஒன்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. சஞ்சிகையின் பத்தி எழுத்தினை பதிவுகள் என்ற பெயரில் சஞ்சிகையின் ஆசிரியர் எழுதினார்.

'பதிவுகள்' என்ற தலைப்பு பின்னாளில் கவர்ச்சிக்குரியதொன்றாகவும் மாறிவிட்டது. தமிழகத்தின் சிறுசஞ்சிகைகளான சலனம் காலச்சுவடு, பன்முகம், தாமரை, நிழல், சொல் நடுப்பகுதியில் இருந்து இதே தலைப்புக்கொண்ட பகுதிவெளிவந்தது. வருகின்றது.

இவ்வாறு யேசுராசா தனது என்னுரையில் எழுதியுள்ளமை பதிவுகளின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது.

அலையை ஆரம்பித்த போது, அலையின் ஆசிரியர்கள் பலர் இருந்தனர். அவர்களே பத்தி எழுத்தினை மாறிமாறி எழுதுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், 25 ஆவது இதழில் இருந்து நான் மட்டுமே தனியாகச் செயற்பட நேர்ந்தது. எனவே அதனிலிருந்து இறுதி இதழ்வரை ஒவ்வொரு இதழிலும் நானே பத்தி எழுத்தினை எழுதினேன். இவ்வாறு யேசுராசா பத்தி எழுத்தினை - தற்போதைய பதிவுகள் வெளியீட்டின் உருவாக்கத்தினைக் குறிப்பிடுகின்றார்.

அலை சஞ்சிகையின்பத்தி எழுத்துக்களே தற்போது பதிவுகளாக வெளிவந்துள்ளது.

பதிவு என்ற சொல் குறிக்கும் பொருள் பல்வேறு வகைப்பட்டது. குனிவு, சாய்வு, பதிதல் என்கின்ற சொல் பதிவு என்ற சொல்லின் பன்மை வடிவமாகும். ஆகவே பதிவுகள் என்பது, குனிவுகள் சாய்வுகள், பதிதல்கள் என்ற பொருளில் அமைந்து விடுகின்றது.

குனிவுகள், சாய்வுகள் யேசுராசா தனது நூலினை வெளியிட்டு இருக்கமாட்டார். இதற்கு இந்த நூலின் பின்னட்டையில் நிலாந்தன் குறித்துள்ள குறிப்புக்கள் சான்றாக அமைந்துள்ளன.

யேசுராசாவுக்கு நசியத்தெரியாது, நழுவத்தெரியாது உடனடியாகப் பொருள் சொல்லத்தெரியாது, இது இவ்வளவும் போதும் ஒரு முரணியாகிவிட, ஒரு தனியனாகிவிட. ஆனாலும், யேசுராசா சிலித்துத் தேங்கி நிற்கும். ஒரு தனியன் அல்ல, சரியாத மனிதர் அவர் என்று, குறிப்பிடுகின்றார் நிலாந்தன்.

இதன் மூலமாக பதிவுகள் என்ற யேசுராசாவின் நூலின் கருத்து பதிதல்கள் எளியதாகவே அமைந்து இருப்பதை காணமுடிகின்றது. அலைக்காலம், திசைக்காலம், கவிதைக்காலம், தெரிதல்காலம் என்று வருகின்ற யேசுராசாவின் கலை இலக்கிய காலங்களில் அவர் சந்தித்த இலக்கிய சம்பந்தமான விடயங்களை முக்கியமான சம்பவங்களை இந்த நூலின் மூலமாக அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

பதிவுகள் நூல் அலையின் பத்தி எழுத்துக்களாக அமைந்திருந்தாலும், யேசுராசாவின் கலை இலக்கிய முயற்சிகளில் சந்தித்த நிகழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளமை புலனாகின்றன.

யேசுராசாவின் மனதைக் கவர்ந்தவை, மாறுபாடானவை, எதிர்வினைக்குள்ளானவை என்கின்ற மூன்று வகையான விடயங்களை பதிவுகள் நூலில் காண முடிகின்றது.

ஈழத்து உலகின் முது பெரும்படைப்பாளியான சண்முகஞ் சிவலிங்கத்துக்கு இந்நூல் யேசுராசாவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலை இதழ் வெளிவந்த காலப்பகுதியில் நடைபெற்ற பல்கலைக்கழக கருத்தரங்குகள், இலக்கியக் கூட்டங்கள், இலக்கிய பேச்சுக்கள், திரைப்படத் தொடர்கள் இவை போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய தனது கருத்துக்களை யேசுராசா பதிவுகள் மூலம் தந்துள்ளார்.

அந்திவானம் பதிப்பகம் இந்த நூலை அழகுற அச்சில் பதித்துள்ளனர். கலைஇலக்கிய முயற்சிகளின் பதிவுகளாகவே இது அமைந்துள்ளமை எதிர்கால இலக்கிய ஆர்வலருக்கு பயன்மிக்க ஒன்றாக இருக்கும்.

**நகுலன்**

---

பனிக்குடம் தாங்கும் புல்நுனிகளை அன்போடு ஆதவன் தீண்டும் அழகிய பொழுதிலே சோழத்துச் சாம்ராஜ்ஜியத்தின் ஒப்பற்ற புலவர்கள் இருவர் சந்திக்கின்றனர்.

# வம்புக்கு வராதே கம்பா!

சுந்தரத் தமிழிலே செந்தமிழ் காப்பியம் தந்த கவிச்சக்கரவர்த்தி கம்பனும், மந்திரத் தமிழால் செந்தமிழ் உலகையே வாழவைக்கும் பைந்தமிழ் மூதாட்டி ஔவையும் அவளே.

கம்பனுக்கு கவித்துவத்துக்கு அப்பால் வம்பிற்கு இழுக்கும் தலைக்கணமுந்தான். ஔவையைக் கண்ணுற்ற கம்பன் எவ்வகையிலும் தன் கவித்துவத்தால் ஏழனப்படுத்த விரும்பினான். சந்தர்ப்பத்தைத் தேடிய கம்பனுக்கு சாதகமானது. ஒரு தண்டில் நான்கு இலைகளுடன் குடைபோல் கவிந்திருந்த ஆனரப்புல்.

அடி என்று சொல்லிவிட்டால் ஒருபடி ஔவை குறைந்து வருவாள் எண்றெண்ணிய கம்பன் சிலேடையாக "ஒரு காலடி நாலிலைப் பந்தலடி என்கின்றான்.

தமிழின் செல்வியை எடி எனக்கூறி ஏளனம் செய்துவிட்டதாக கம்பனுக்கு ஒரு தெம்பு.

தமிழ் சுவையை நன்கறிந்த முத்தமிழ்ச் செல்வி விடுவானா? முழங்கியது. ஔவையின் சொற்பீரங்கி. பாய்ந்துசென்ற சொல்லம்புகளால் பரிதவித்துப் போனார் கவிச்சக்கரவர்த்தி.

பார்ப்பதற்கே ஏற்பில்லா அவலட்சனமானவனே உயிர் எடுக்கும் கூற்றுவனை ஏற்றிவரும் எருமையே, ஆற்றலொண்ண அவலத்தை குவலயத்திற்குக் கொடுக்கும் மூதேவியைத் தாங்கிவரும் கழுதையே, போரினால் கூரையற்ற சிவரைப் போன்று தலைக்கணத்தால் மதியிழந்தவனே. அரக்கர் குலத்தை அழிக்க தசரதன் மைந்தனுடன் தாவியே இலங்காபுரி சென்ற இழிந்த குரங்கே. அடே நீ நவின்றது ஞானத்தில் நிற்கும் ஆரைப் புல்லைக் குறிக்கும்.

பொல்லைக் கொடுத்து சொல்லால் அடிவேண்டிய கம்பன் நடக்கின்றான் நிலம்நோக்கி.

"எட்டேகா லட்சணமே யேமனேறும்பரியே மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற் கூரையில்லா வீடே குலவராமன்றூதுவனே ஆரையடா சொன்னாயடா"

**நீலா**

---

வளர்ந்துவரும் நிறுவனமொன்றில், ஆட்களை தெரிவு செய்து வேலைக்கு அடிக்கடி நியமனம் வழங்குவார்கள் ஏனெனில் ஒருதேவை பூர்த்தியாக அதற்கான இன்னொரு தேவை வெற்றிடமாகவுள்ளது. ஒவ்வொருவருக்கும் இதுதான் வேலை

# நான் மட்டுமல்ல...

என்று பிரித்துக்கொடுக்கின்றபோது, அந்த வேலை முழுமையாக நிவர்த்தி செய்யப்படாமையும், அரையும் குறையுமாக இருக்கும். அந்த இடத்தில் எல்லாவேலைகளையும் பகிர்ந்து செய்யப்படும் போது தரமானதாக பூர்த்திசெய்யப்படும்.

முதல்நாள் வேலைக்கு வந்தேன். புதிய தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக இருந்தார்கள். எனக்காக ஒதுக்கப்பட்ட இடம் அங்கே உட்கார்ந்தேன். அங்கே வேலைசெய்கின்ற எத்தனை பேரின் கண்களுக்கு நான் எதிரியாக வருவேனோ அல்லது நண்பனாக வருவேனோ எனக்கே தெரியாது.

ஒரு சிலருக்கு இதுதான் முதல்வேலையாக இருக்கும். வேலைசெய்யும் போது, பலருடனும் சத்தம் போட்டு மரியாதை இல்லாமல் தரக்குறைவாகத்தான் கதைப்பார்கள். தனக்குத்தான் இந்த வேலைதெரியும் என நினைத்திருக்கலாம். அல்லது இந்த வேலையை யாராலும் செய்யமுடியாது என்று நினைத்திருக்கலாம். அல்லது தான் இல்லாவிட்டால் இந்த வேலைக்கு ஆட்கள் இல்லை என நினைத்திருக்கலாம். அவர்களுடன் நல்லாய் நல்லவர்கள் பழகுவதில்லை.

எனக்கு கிடைத்த இந்த இடத்தில் முதல் ஒருவர் வேலைசெய்தார். அவர் இல்லாதபோதுதான் என்னை இந்த வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். என்று என்னுடன் வேலை செய்கின்ற ஒருவர் சொன்னார். அன்றிலிருந்து நான் நினைத்துக்கொண்டேன் நான் இல்லாதபோது என்னுடைய இருக்கைக்கு இன்னொருவர் வருவார் என்று.

**செல்வா**

---

# நொடியிலும் மறு நொடியிலும் வாழ்பவர்கள்



தன் பிள்ளைக்கு
ஒரு அம்மா அடித்திருக்கக் கூடும்,
எரிச்சல் கிளம்ப
உறுமி விரட்டியிருக்கும்
தன் குட்டிகளை பெட்டைநாய் ஒன்று,
தன் கணவரை திட்டியிருப்பாள்
குடும்பப் பெண்ணொருத்தி,
வராமல்போன காதலனை
செல்லமாக கோபித்திருப்பாள்,
நகரப்பூங்காவில் காத்திருந்த
இறுக்கமான உடையணிந்த இளம் பெண்,
ஒரு இலை உதிர்ந்திருக்கும்,
பூவொன்று பூத்திருக்கும்,
பலர் மகிழும்படி
யாதேனும் ஒருத்தி
பூப்பெய்திருப்பாள்,
இன்னும்
பள்ளி மாணவியொருத்திக்கு
காதல் வந்திருக்கும்,
உன்னைப் போல சில பெண்களால்
மறந்திருக்கும்,
என்னைப் போல் சில ஆண்களின்
காதலை
சுலபமாக நிராகரித்துவிட,
எப்போதும் போல
இயல்பாகவே கரைந்துவிடுகின்றது
எல்லாம் நிகழ்ந்த அந்த நொடி.
என்றும்
உன்னைப்போல ஒரு சிலராலேயே
முடிகிறது,
உன்னைப்போல வெகு சிலரை
தொடர்ந்தும் காதலிக்க,
கரைந்த அந்த நொடிக்கு
அடுத்த நொடியிலும்.

**யோ.கர்ணன்**

---

அன்றைக்கு விடுமுறைநாள். விடுமுறை நாட்களை வீட்டில் இருந்து கொண்டாடுவது, அலுவலகத்தில் அடைபட்டுக்கொண்டிருக்கும் எனக்குச் சரியாகப்படவில்லை. என்னுடைய உறவினர் வீட்டுக்குச் சென்று வருவோம் என்று நினைத்து, அதற்கான ஆயத்தத்தினை செய்தேன்.

# பார்வைகள்

அறைக்குள் தொலைக்காட்சி வேலைசெய்துகொண்டிருந்தது. மகள் விஷ்ணுபுராணம் பார்த்துக்கொண்டிருந்தான். விஷ்ணுபுராணம் முடிந்தகையோடுதான் நான் ஆயத்தமாவேன். மகன் அடம்பிடித்தான்.

இந்திய மீற்றரில் விஷ்ணுபுராணம் முடிந்தகையோடு சக்தி ரீவியில் நகைச்சுவை நேரம் நடக்கும். அதைப்பார்த்துவிட்டு வெளிக்கிடலாம். மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.

என் மனைவி அடுப்படிக்குள் நின்று அவதிப்பட்டுக்கொண்டு நின்றாள். ஒரு மணிக்கு அவளுடைய அபிமான நடிகர் ஒருவரின் திரைப்படம் இன்று ஒளிபரப்பாகவுள்ளதாம். அது அவளுடைய கவலை. மனைவியும் திரைப்படத்தைப்பார்த்துவிட்டுத்தான் ஆயத்தமாவாள் போலத் தெரிந்தது.

இன்றைக்கும் வீட்டில்தான் எனது விடுமுறை நேரம் கழியப்போகின்றதோ என்பது எனது கவலையாக இருந்தது.

என்னுடைய முகத்திலிருந்த கவலையும் என்னுடைய முகமாற்றத்தையும், அவதானித்த மனைவியும் மகனும் என்னை விடுமுறை நாளில் மகிழ்விப்போம் என்று நினைத்தவர்களாக தனது ஆசைகளை துறந்துவிட முடிவுசெய்தார்கள்.

அவர்களின் அந்த முடிவினால் எனது பயணம், நான் நினைத்தமாதிரியான விடுமுறையை உல்லாசமாக கழிக்கும் எண்ணம் நிறைவேறியது.

நாங்கள் குறித்த உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக, எமது வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டியை மூடிவைத்துவிட்டு வீட்டில் ஒன்றாகச் சேர்ந்து சில அவசியமாகச் செய்யவேண்டிய வேலைகளை நிறைவேற்றிவிட்டு, ஒன்றாக மேசையிலிருந்து சாப்பிட்டுவிட்டு, குறித்த உறவினர் வீட்டுக்கு எனது மோட்டார் சைக்கிளில் சென்றோம்.

மனைவியையும் மகனையும், ஏற்றிக் கொண்டு விடுமுறைநாள் ஒன்றில் பயணிக்கும் பயணம் என் மனதில் மகிழ்ச்சியைத் தந்தது. சாதாரணமாக அலுவலகத்துக்குச் செல்லும்போது, சிலவேளைகளில் மனைவியை கடையிலும், மகனை பள்ளியிலும் விடுவதற்கு எனது மோட்டார் சைக்கிளில் அழைத்துச் செல்வது வழக்கமானதொரு பணியாகும். அதனை விட இன்றைக்கு செல்லும் பயணம் மனதில் ஒருவித அழுத்தங்களும் இல்லாத வகையில் அமைந்திருந்தது. மனதில் இலேசானதொரு உணர்வு.

உறவினர் வீட்டுக்குச் சென்றோம். உறவினர் வீட்டின் கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது. நான் கதவைத்தட்டி உறவினர் பெயர்சொல்லி அழைத்தேன்.

கதவினை திறந்ததும் அவர்களது வீட்டின் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் விறாந்தையில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்னே மேசையில் தொலைக்காட்சி ஓடிக்கொண்டிருந்தது.

உறவினர்கள் எங்களுக்கு ஆசனங்களைத் தந்து உபசரித்தனர். நல்ல படம் ஓடுது. இவர்தான் இந்தமுறை சிறந்த நடிகர் விருது பெற்றவர் என்ற சிறு குறிப்புக்களும் வேறு.

படத்தில் ஒரு வசனம் வந்தது, அனைவரும் அந்த வசனம் பற்றி விமர்சித்தனர். நல்ல வசனம் என்று கூறிவிட்டு மீண்டும் தொலைக்காட்சியில் கவனம் செலுத்தினர்.

நாங்கள் எதைஎதையெல்லாம் இழந்துவிட்டோம் இது பற்றி கவலைப்படவில்லை. தற்போது மனிதத்தையும் இழந்து வருகின்றோம் என்பது தான் தொலைக்காட்சியில் வந்த வசனம்.

**ரஜிதா**

சர்வதேச அரசியல்...

கே.ரீ.கணேசலிங்கம்



# ஈராக்கிய கிளர்ச்சியை முறியடிக்க அமெரிக்கா கையாளும் புதிய உபாயம்

சர்வதேச அரசியல் மீண்டும் ஈராக் பக்கம் திரும்பியுள்ளது. சதாம் உசைன் கைது செய்யப்பட்ட பரபரப்புடன் ஓய்ந்துபோன ஈராக் விவகாரம் மீண்டும் சூடுபிடித்துள்ளது. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் மட்டுமல்ல உலகமே சதாம் கைதோடு ஈராக்கின் எதிர்ப்புணர்வும் போராட்ட திறனும் முடிந்துவிட்டதென கணக்குப் போட்டது. அமெரிக்க ஆளும்வர்க்கம் தனது இலக்கு வென்றுவிட்டதாகவும் அதனை வைத்து முழு மேற்காசியாவையும் கட்டுப்படுத்தி விடலாமெனவும் திட்டமிட்டது. நிலமையை ஈராக் மக்களும் ஷியா, சுனி, முஸ்லிம் கிளர்ச்சியாளர்களும் தலைகீழாக்கிவிட்டனர். எனவே, இந்த வாரம் ஈராக் விவகாரத்தையும் அதன் பிந்திய நிலையையும் பரிசீலிப்போம்.

கடந்த இரண்டு வாரங்களாக இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக போரிட்டுவருகின்றனர். இந்தப் போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், ஐம்பதிற்கும் மேற்பட்ட அமெரிக்கப்படைகளும் வேறு நாட்டு ஆக்கிரமிப்புப்படைகளும் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு நகரங்கள் (நஜாப்,குட்) கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் இருப்பதுடன், மேலும் ஒரு நகரத்தைக் கைப்பற்றும் நிலையில் கிளர்ச்சியாளர்கள் உள்ளார்கள் என தகவல்கள் கூறுகின்றன. (பலூஜா) இதைவிட அமெரிக்க ஆக்கிரமிப்பில் பங்கெடுத்துக் கொண்ட ஜப்பானியப் படைகளை வாபஸ்பெற வைக்க எடுத்துவரும் நடவடிக்கை பெரும் குழப்பத்தை ஜப்பானில் ஏற்படுத்திவருகின்றது.

அவ்வாறே ஸ்பெயினும் அண்மையில் நடந்த ரயில் மீதான குண்டுத் தாக்குதல் ஆட்சியை மாற்றியதுடன், ஈராக்கிலிருந்து ஸ்பெயின் படைகளை வெளியேற்றுகின்ற நடவடிக்கையாகவும் உள்ளது.

இவ்வாறே பல்கேரியா, போலந்துப் படைகளும் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாது பின்வாங்கிவருகின்றமை அமெரிக்காவுக்கு பெரும் நெருக்கடியாக மாறிவருகின்றது.

அமெரிக்க தலைமையிலான படைகள் ஈராக்குக்குள் நுழையும்போதும், அதன் பின்பு நிகழ்ந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும், மீண்டுமொரு வியட்னாமை அமெரிக்காவுக்கு நினைவுபடுத்துமென பல சர்வதேச அரசியல் விமர்சகர் கள் கருத்துக் கூறினர். அவ்வப்போது வியட்னாம் போன்று ஈராக் மாறினாலும், அமெரிக்கப்படைகள் அதனை முறியடித்துவிடும் என்ற கருத்தும் அப்போது பிரதிபலித்தது.

ஆனால், நிலமை இப்போது மிகமோச மான கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக் கின்றது. தற்போது ஈராக் விவகாரத்தில் இரண்டு முக்கிய மாறுதல் கட்டங்கள் நிக ழத் தொடங்கியுள்ளது. அவை இரண்டை யும் விரிவாக நோக்குவோம்.

முதலாவது - ஷியா இன முஸ்லிம்களின் மதகுருவான மொக்டடாசரின் தலைமையிலான கிளர்ச்சிக்குழுவின் தீவிரமான தாக்குதல் அணுகுமுறைகள் காணப்படுகின்றமை. கிளர்ச்சியாளரின் தலைமை - ஈராக்கை விட்டு ஆக்கிரமிப்புப்படை முற்றாக வெளியேறும்வரை தாக்குதல் தொடரும் என கூறுகின்றது. அதற்கு ஏற்றமாதிரி அமெரிக்கா அடங்கிய ஆக்கிரமிப்புப்படைகளின் இராணுவ தலைமை அலுவலகம்மீது பாரிய தாக்குதல் ஒன்றை கிளர்ச்சியாளர்கள் நிகழ்த்தியுள்ளனர்.

இதனால், ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ தளபதி குழப்பமடைந்திருப்பதுடன், அதற்கான தனது அதிர்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஈராக்கில் நிகழ்ந்துவரும் எதிர்ப்புத் தாக்குதலில் இரண்டு இனப்பிரிவும் அதாவது ஷியா, சுனி பிரிவுகள் ஒரே தடவையாக தாக்குதலை நிகழ்த்திவருவதும், ஆக்கிரமிப்புப் படைகளுக்கு திணரடிப்பாகவுள்ளது. இரண்டு இனப்பிரிவையும் தந்திரமாக பிரித்து அவற்றை மோதவிடுவதன்மூலம் அரசியலை நடத்தலாம் எனத் திட்டமிட்ட அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு இது ஓர் அதிர்ச்சியான செய்தியாகவே அமையும். அது மட்டுமன்றி இரண்டு இனப் பிரிவுகளும் இரகசியமான நிலையில் உறவினைக் கொண்டிருப்பதாகவும் அதனை அடிப்படையாகக் கொண்டே கிளர்ச்சிகளைத் திட்டமிட்டு நிகழ்த்திவருவதாகவும் தக்வல்கள் தெரிவிக்கின்றன.

'முதலில் ஆக்கிரமிப்பை விரட்டுவோம் பின்னர் எமக்குள்ள முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்வோம்' என்ற அடிப்படையிலேயே கிளர்ச்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிளர்ச்சியாளர் பக்கத் தகவல்களை வெளிப்படுத்தும் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனவே, கிளர்ச்சியை திட்டமிட்டு ஆரம்பித்துள்ள இரண்டு இனப் பிரிவுகளும் தெளிவான வரையறையுடனும், திட்டமிடலுடனும் செயல்பட்டால் இலகுவாக ஆக்கிரமிப்புப் படைகளை வெளியேற்ற முடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் மீது நிகழ்ந்துவரும் தாக்குதல்களைக் கிளர்ச்சியாளரின் கைகளைப் பலப்படுத்துவதுடன், கிளர்ச்சியாளர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளும் ஆட்சியாளர்களுக்கான பாணியில் அமையவில்லை என்பதும், அதன் சாதகமான புள்ளியாக அமைந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஈராக் மக்களின் மனோநிலைகளையும், அவர்கள் புரட்சியோடு கொண்டிருக்கும் தொடர்பையும் மதிப்பீடு செய்யத் தவறக்கூடாது. சதாம் என்ற தனிமனித தலைமைக்காக நீண்டகாலம் நெருக்கடியைச் சந்தித்த ஷியா முஸ்லிம்கள்-தமக்கொரு வாய்ப்புக் கிடைத்திருப்பதாக கருதுகின்றனர். உலகில் ஷியா முஸ்லிம் ஆளும் நாடுகளின்மீது அமெரிக்க ஆக்கிரமிப்பு எப்படித் தோற்கடிக்கப்பட்டதென்ற முன்னனுபவத்தை விளங்கிக் கொள்வோமாயின் அவர்களது உணர்வையும் பலத்தையும் அளவீடு செய்யமுடியும். சுனி முஸ்லிம்கள் ஆட்சியில் பங்கெடுத்தபோதும் சதாம் என்ற தனிமனிதனது ஆளுகைக்குள் தான் அடக்கப்பட்டிருந்தனர். அப்போது அவர்கள் ஷியா முஸ்லிம்களை ஆளும் அதிகாரத்தின் பங்கிலிருந்துதான் ஓரங்கட்டினார்களே அன்றி, குருட்டீஸ் பிரிவைத் தாக்கியது போன்று ஆளும் தரப்புக்கூட ஷியாவை தாக்கவில்லை.

இதுவும் ஒரு சாதகமான விடயமாக மாறியுள்ளது. இன்றைய அரசியலில் இந்த இரண்டு பிரிவையும் நாட்டுக்குள் ஒன்றிணைத்து நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் வெற்றி கிட்டினாலும் ஷியாப் பிரிவையே பிரதேச மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் முதன்மைப்படுத்தப்படும் நிலையைக் காணலாம். சுனி முஸ்லிம்களைப்போல் சலுகைகளுக்கும் பிரபல்யத்திற்கும் தமது தனிப்பட்ட நலன்களுக்கும் ஷியாப் பிரிவினர் நாட்டையோ, மக்களையோ காட்டிக் கொடுப்பவர்களல்ல என்ற பிரச்சனைகளும், அபிப்பிராயமும் காணப்படுகின்றது. எனவே, ஷியாக்கள் தலைமையிலான கிளர்ச்சியை அமெரிக்கர்கள் கட்டுப்படுத்துவது கடினம் என்பதை ஈரான் புரட்சியின்போதே அவர்கள் புரிந்திருக்கவேண்டும்.

இரண்டாவது விடயம் இந்தக் கிளர்ச்சியை அடக்குவதற்கு அமெரிக்கர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை பற்றியது. இராணுவ ரீதியான அணுகுமுறை தவறானதென்பதை ஏற்கனவே அவதானித்தோம். நிச்சயமான நேரடி இராணுவத் தலையீடு கிளர்ச்சியை மேலும் தீவிரப்படுத்தும்.

ஆனால், தற்போதைய நிலையில் அமெரிக்க ஆளும் தலைமையிலான நடவடிக்கையும், ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவ தளபதியும், ஈராக்கின் ஆளும் சபையும் மேற்கொள்ளும் அணுகுமுறையும் சற்று வித்தியாசமாகவுள்ளது.

அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் கொலின்பவல் - ஊடகங்களுக்கு கருத்துக் கூறும்போது- ஈராக்கிய மக்களின் கிளர்ச்சியைக் கண்டு தாம் வியப்படைவதாகவும், ஈராக்கிய மக்களை தாம் தவறாக கணக்குப் போட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்றே ஈராக்கின் ஆளும் சபை போர் நிறுத்தமொன்றை இரு தரப்பும் அறிவிக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. ஈராக்கின் ஆளும் சபையிடமிருந்துவரும் கருத்தென்பது ஆக்கிரமிப்புப் படைகளிடமிருந்துவரும் தகவலுக்கு ஒப்பானது. அதாவது அமெரிக்காவே மறைமுகமாக ஒரு போர்நிறுத்தத்தை விரும்புகிறது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. எனவே, அமெரிக்கர்கள் புதிய அணுகுமுறைக்கு தயாராகி வருகின்றனர். அவர்கள் கிளர்ச்சியை அடக்க மறைமுக இராணுவ நடவடிக்கையையும் நேரடியாக அல்லது வெளிப்படையாக சமாதான முயற்சிகளையும், மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றமை புலனாகின்றது.

எப்போதும், ஆக்கிரமிப்பு சக்திகள் மக்களின் கிளர்ச்சிகளை எதிர்கொள்ளமுடியாதபோது, தந்திரமான அணுகுமுறையை பின்பற்றி மக்களை ஏமாற்றுவதன்மூலம் இராணுவ அரசியல் இலக்கை அடைந்து கொள்ளும். இது உலகவரலாற்றில் ஐரோப்பிய ஆதிக்கத்துக்கான கொள்கை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நிகழ்ந்துவருகின்ற அம்சமாகவுள்ளது.

இதனையே இராஜதந்திரமென அழைக்கப்படுகின்றது. இலக்கை அடைவதற்கான உபாயத்தில் அமெரிக்கா இறங்கியுள்ளதென்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது. பல இலட்சக் கணக்கான இந்தியர்கள் ஒரு ஆயிரம் இராணுவத்தைக் கொண்டு பிரித்தானியாவால் பல நூற்றாண்டுகள் அடிமைப்பட்டது போன்றதே இதுவாகும்.

இவ்வாறு அமெரிக்கா மேற்கொள்ளும் அணுகுமுறையிலும் சுனி முஸ்லிம்கள் போராடும் பலூஜா நகரில்தான் போர்நிறுத்தத்தை அறிவிக்கவேண்டுமென ஆளும் சபை கோருகிறது. ஏன் என்பதே பிரதான கேள்வி. சுனி முஸ்லிம்களுடன் உறவைப் பேணிக்கொண்டு, ஷியாவை தாக்கலாம் என்பது ஒருபக்கமான எண்ணமாக உள்ளது போல், ஷியாக்களைவிட சுனி முஸ்லிம்களை இலகுவாக விலைக்கு வாங்கிவிடலாமென அமெரிக்கா கணக்குப் போட்டுள்ளது.

எனவே, அமெரிக்காவின் புதிய அணுகுமுறைக்கு கிளர்ச்சியாளர்கள் விட்டுக்கொடுப்பார்களேயாயின் ஆக்கிரமிப்புப்படைகள் தப்பிப்பிளைத்துவிடும். அவை மீண்டும் இலகுவாக அரசியல் வழிமுறைகளையும் கொலின்பவல் கூறுவதுபோல் ஏற்கனவே விட்ட தவறுகளை சீர்ப்படுத்தி ஈராக்கியரை மடக்கிவிடுவார்கள். அதனால், கிளர்ச்சி தொடருவதே ஆக்கிரமிப்பை முறியடிக்க வழியாகவுள்ளது. இது ஈராக்கியருக்குரிய விடயம் மட்டுமல்ல ஆக்கிரமிப்பை எதிர் நோக்கும் உலக மக்களுக்கு பொதுவான அம்சமுமாகும்.

---

உங்கள் சிந்தனைக்கு

எஸ்.ஜெயா

# ஒவ்வொரு தமிழனும் சித்தத்தின் சுதந்திரத்தைப் பேணிக் கொள்ளுதல் வேண்டும்

மனித வாழ்வுமுறையோடு நெருங்கிய தொடர்புபட்ட ஓர் எண்ணக்கருவாக "சுயாதீன சித்தம்" (FREE WILL) அமைகின்றது. சித்தம் சுதந்திரமானது என்பது இதன் பொருளாகும். ஒவ்வொரு மனிதனும் சித்தத்தின் சுதந்திரத்தைப் பேணிக்கொள்கின்றான். இவன் இதனூடாகத் சித்தத்தின் சுதந்திரம் முரண்படாது இருப்பதற்காக முயற்சிக்கிறான்.

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஆக்கிரமிப்புக்களிலிருந்து விடுபட முயற்சிப்பது சுயாதீன சித்தத்தை பேணுவதற்கான உறவுகளில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதே போன்றுதான் ஒவ்வொரு இனமும் ஆக்கிரமிப்புக்களிலிருந்து விடுபட முயற்சிக்கின்ற போது, சுயாதீன சித்தத்தை பேணுவதற்கான ஏனைய இன உறவுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

இதற்குக் காரணம் ஒவ்வொரு இனத்திலுமுள்ள ஒவ்வொருவரும் தமது ஒழுக்கத்தைப் பின்பற்ற, மதத்தைப் பின்பற்ற பேச்சு, எழுத்து, கூடிவாழ்தல் போன்ற உரிமைகளைப் பேண முயற்சிப்பதாகும். இத்தகைய முயற்சிகளின்போது தடைகள் ஏற்படுமாயின் சுயாதீன சித்தத்தைப்பற்றி உணர்வும் பேசவும் தொடங்கி விடுகின்றனர்.

இது இவ்வாறு தனிமனிதன், குடும்பம், பிரதேசம், சமூகம், நாடு என விரிவடைந்து செல்கின்றது. இவ்வாறே தமிழரின் உரிமைப் போரும் விரிவடைந்து வியாபித்துள்ளது. இது தமிழர் வாழ்வு உரிமையில் சுயாதீன சித்தத்தின் ஓர் விரிவாக்கமாகும். இவ்வாறு பரந்து விரிவடையும் சுயாதீன சித்தமானது- உலக ஒழுங்கில் பொதுவாக இருவகையான போக்குகள் ஆரம்பகாலங்களில் காணப்பட்டன.

1. தாராண்மைவாதப் போக்கு
2. துணிவு வாதப்போக்கு

தாராண்மை வாதப் போக்கு - சித்தம் சுதந்திரமானது என்பதால் சித்தத்தின் விருப்படிப்படையில் வாழ்வதே மேலானது எனக் கருதுகின்றது. அதாவது சித்தம் எதை விரும்புகின்றதோ அவை அனைத்தையும் அடைய உரிமை கொண்டுள்ளது என்பதாகும்.

இப்போக்கின்படி சித்தம் சுயாதீனமானது. அதனைக்கட்டுப்படுத்த, ஆக்கிரமிக்க எவராலும் முடியாது எனக்கருதும் நிலையியல் ஆகும். இத்தகைய தாராண்மை வாதப் போக்கு அடுத்தவர் சுதந்திரத்தை, அடுத்தவர் உரிமையிணைப் பாதிப்பதாக அமைந்துவிடுவதோடு, அடுத்தவர் நிலையினை முரண்படுத்துவதாகவும் காணப்படுகிறது.

துணிவு வாதப்போக்கினை நோக்குகின்றபோது - சித்தம் சுதந்திரமான்து என்பதால் அதன் விருப்பத்திற்குச் செயற்படவிடாது சமூகநிலைகள், சமூகதேவைகள் என்பனவற்றிற்கு ஏற்ப பிரயோகிக்க வேண்டும் எனக் கூறுகிறது.

சித்தம் சுதந்திரமானது என்பதால் சித்தத்தின் விருப்பத்திற்கு ஆட்படும்போது சமூகத்தில் முரண்பாடுகளும் பிரச்சினைகளும் தோன்றிவிடுகின்றன. அதனால், இதனை நெறிப்படுத்தி வாழ்வதே பொருத்தமானது என்கின்றது.

எது எவ்வாறு இருந்த போதும் "சுயாதீன சித்தம்" இன்று முக்கியமான ஒரு கருத்தியலாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். சித்தம் என்பதைப் பலர் பலவாறு தமக்குள் விளங்கிக்கொள்ள முயல்வதாலும் தமக்குச் சார்பான மத, இன, மொழி, கலாசாரம் சார்பான விழுமியங்களோடு இனங்காண முயல்வதாலுமே இன்றைய இன, பிரதேச முரண்பாடுகள் தலைதூக்கக் காரணமாக அமைந்துள்ளன.

சுயாதீன சித்தத்தின் பால் தமிழ் என்ற உரிமைக்குரல், ஒட்டுமொத்தத் தலைமையின்கீழ் இனங்காட்டப்படுகின்றபோதும், ஈழவிடுதலை என்பது உறுதியான ஒன்றாகவே அமையமுடியும்.

ஒழுக்கவியல், அரசியல், அழகியல், மதமெய்யியல், சட்டம், தண்டனை, சமூகவியல் என்பன "சித்தம்" பற்றிய கருத்தினை தம்முள் உள்வாங்கியுள்ளது.

எனவேதான், தமது நிலைகளில் தமது உரிமைகளை தக்கவைத்துக்கொள்ள தம் எதிர்காலத்தினை வளம்படுத்த ஒவ்வொரு தமிழனும் சித்தத்தின் சுதந்திரத்தை பேணிக் கொள்ளுதல் வேண்டும்.

இது இலங்கைத் தமிழராக இருந்தாலும் சரி புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழராக இருந்தாலும் சரி தமது சுயாதீன சித்தத்தை (FREE WILL) பேணிக்கொள்வதனூடாகவே தமது இருப்பினைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

இங்கு இருப்பு என்பது புலம்பெயர் தமிழர்களிடையே ஓர் கேள்வி நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதற்குக் காரணமாக அமைவது இவர்களிடத்தில் உருவான சந்ததி இடைவெளியாகும். ஈழத்தில் பிறந்த பெற்றோர் திருமணம் காரணமாக ஐரோப்பாவில் தமது குழந்தைகளைப் பிரசவிக்கின்ற போது, அவர்கள தொடர்பான வாழ்வுமுறையில் தமது பண்பாடு, கலாசாரம் தொடர்பான சித்தத்தில் போராடவேண்டி அல்லது விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது.

இது காலப்போக்கில் இவர்கள் தொடர்பான பண்பாடு, காலாசாரம், மொழிநிலை என்பவற்றில் தாம் யார்? எனத் தம்மைத் தானே அகநிலை ஆய்வை மேற்கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்திவிடுகின்றது.

இதன்மூலம் அவர்கள் தாம் ஐரோப்பியரா? அல்லது ஈழத்தவரா? என்ற சித்தத்தின் பால் விடைகாண வேண்டியுள்ளது. இது எதிர்காலத்தில் சந்ததிப் பிறழ்வான பல நடவடிக்கைகளுக்கு வித்திட்டுவிடுகிறது.

இதேபோன்றே, ஈழத்தமிழரும் தமது தாயக வாழ்வுரிமை தொடர்பாக சித்தத்தின் பால் விடைகாண வேண்டியவர்களாக உள்ளனர். எனவேதான் மீண்டும் ஒரு முறை கூறுவதாயின்-

ஒவ்வொரு தமிழ்குடிமகனும் சித்தத்தின் சுதந்திரத்தைப் பேணிக்கொள்ளுதல் வேண்டுமாயின் - சுயாதீன சித்தத்ததை கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு இவர்கள் குறுகிய பிரதேசவாதம், தொடர் மூளைச்சலவை என்பனவற்றிலிருந்து விடுபட்டு புதியதொரு போக்கினை உருவாக்கவேண்டும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்
திருக்குறள்

# நமது நோக்கு

## வெளிப்படும் ஜே.வி.பியின் சுயரூபம்

திருமணத்திற்கு முன்னாலேயே அதாவது திருமணத் திற்கான பேச்சுக்கள் நடக்கும்போதே சீதனம் உட்பட சகல பிரச்சினைகளையும் தெளிவாகப் பேசி முடிவெடுத்த பின்னரே கல்யாணத்தை வைத்துக்கொள்ளல் ஒரு மரபு அடிப்படையிலான சம்பிரதாயமாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜனதா விமுக்தி பெரமுன என்கிற ஜே.வி.பி க்கும் இடையிலான கூட்டு வாழ்க் கைக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் முயற்சியானது ஆரம்பம் முதலே பேரம்பேசுதலில் ஏற்பட்ட இழுபறி காரண மாக கையெழுத்து இடும் இறுதி நிகழ்வு வரைக்கும் இந்தக்கல்யாணம் சுமுகமாக ஒப்பேறுமா என்ற சந்தேகம் நிலவவே செய்தது.

சம்பந்த பகுதியால் இருதரப்பினருக்கும் இடையிலான பரம்பரை பகைமைகளுக்கு அப்பால் அவற்றை மறக்கவோ, மன்னிக்கவோ இரு தரப்பாலும் முழுமையாக முடியாத நிலையில் தவிர்க்கமுடியாத ஒரு அவசிய நிர்ப்பந்தமான சூழலில் - உறுதியற்ற உடன்பாடுகளுக்கு மத்தியில் அவரவர் தனித்துவ நலன்களைக் கருத்திற்கொண்டு பொ.ஐ.மு.வும் - ஜே.வி.பி யும் நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தம் ஒன்றில் இணைந்து வாழ கையொப்பமிட்டது. ஒரு வரலாற்று நிகழ்வாகவே செய்திகளில் பிரசித்தி பெற்றதாகியது.

எப்படியோ முதலில் பதிவுத்திருமணமும் பின்னர் முறைப்படி மக்கள் ஆசீர்வாதத்துடனான (தேர்தல் மூலமான) சம்பிரதாயபூர்வமான திருமணமும் வெற்றிக ரமாக நடந்தேறிய பின்னர் சீதனப்பிரச்சினை மீண்டும் தலைதூக்கியுள்ளதுபோலத் தெரிகிறது.

சந்திரிகாவும் - அதாவது இலங்கையின் ஜனாதிபதிக் கும் - ஜே.வி.பியின் சோமவன்ச அமரசிங்கவுக்கும் இடையி லான தேர்தலுக்கான கூட்டு வாழ்க்கை ஒப்பந்தம் -ஜே.வி. பிக்கு இந்தளவுக்கு அனுகூலமான பலன்களையும், பேரம் பேசும் பலத்தையும் தேர்தலின்போது கிடைக்கச்செய்து விடும் என்று சந்திரிகா நினைத்தே இருக்கமாட்டார்.

அதேபோல் ஜே.வி.பியும் தனக்கு இப்படியொரு மக்க ளாதரவுச்சக்தி உருவாகும் எனக் கற்பனை பண்ணியே இருக்காது என்பதில் ஐயமில்லை. அரசியலில் எதிர்பார்ப் பது நடப்பதில்லை... எதிர்பாராதது நடந்துவிடும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், அதற்குள் ஜே.வி.பியினருக்கும் கிடைத்த தேர்தல் முடிவுகளின் தாக்கம் இரு தரப்பினருள்ளும் மாறுபட்டதான மன உணர்வு களை ஏற்படுத்தியதுடன், ஒருவர் மீது மற்றவர் மேலா திக்கம் செய்யும் பனிப்போர் நிலையையும் உருவாக்கவே செய்தது.

ஆரம்பத்தில் பொ.ஐ.முன்னணிக்குள் ஜே.வி.பியை இணைத்துக்கொள்ள யோசித்தபோதே இது ஒட்டகத் திற்கு கூடாரத்திற்குள் இடம்கொடுத்த கதையாகிவிடும் எனப் பலர் கருத்து வெளியிட்டிருந்தனர். ஆனால், அதனை யாரும் கவனத்தில் எடுக்கவில்லை.

ஆரம்பகட்டக் பேச்சுக்களின் முடிவில் ஜே.வி.பியின் கோரிக்கைகளை அது நிபந்தனையாகவிருந்தபோதும கூட -பொ.ஐ.முன்னணி ஏற்றுக்கொண்டபோது, பின்னால் பல சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்று சந்திரிகா கருதிய தில்லை.

தொகுதிப் பங்கீட்டில் தமக்கு 40 தொகுதிகளை ஒதுக்கவேண்டுமெனவும், ஆட்சியமைக்க நேரிட்டால் நான்கு அமைச்சுக்களையும், 4 பிரதியமைச்சுக்களையும் தர வேண்டுமெனவும் ஜே.வி.பி கோரியது. இதற்குச் சந்திரிகா வும் சம்மதித்தார். ஆனால், நிலைமை ஜே.வி.பிக்குச் சாதகமாகும் என்று அவர் நினைக்கவேயில்லை.

நினைக்காதது நடந்துவிட்டது.

ஒப்புக்கொண்டபடி நான்கு அமைச்சுக்களையும், நான்கு பிரதியமைச்சுக்களையும் சந்திரிகா ஜே.வி.பிக்கு வழங்கியபோதும், ஜே.வி.பியின் ஆசை விடவில்லை. மேலும் சீதனம் தருமாறு கோருகிறது. அதாவது மற்றொரு முக்கிய அமைச்சான மகாவலி அபிவிருத்தித் துறையையும் தனக்குத் தருமாறு அடம்பிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஏற்கனவே பிரதமர் பதவிக்கான தமது விருப்பத் தேர்வை ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்ததால், அதிருப்தி யுற்று பிரதமர் பதவியேற்பு வைபவத்தைப் புறக்கணித்த ஜே.வி.பியினர், மகாவலி அபிவிருத்தி துறை அமைச்சுத் தொடர்பாக ஜனாதிபதி ஒரு முடிவையும் முன்வைக்காத நிலையில், ஏனைய அமைச்சுக்களையும் பொறுப்பேற்காது அமைச்சர்கள் பதவியேற்பு வைபவத்தையே முற்றாகப் புறக்கணித்துள்ளது.

இது ஆரோக்கியமான அரசுக்கான ஆரம்பமாகத் தெரிய வில்லை.

இந்தப்பேரம் பேசல் முறையானது - கூட்டுவாழ்வின் இணக்கப்பாடுகளின் அத்திவாரத்திலேயே விரிசல் ஏற்படத் தொடங்கிவிட்டதையே காட்டுகிறது. புதிய அரசு, புதிய பதவிகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பின் சுயநல அபிலாஷை முரண்பாடுகளின் மோதலாகவே தொடரப்போ கிறது என்பதற்கு இந்த நிகழ்வு கட்டியம் கூறுகின்றது.

ஏற்கனவே பலவீனமான பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியில் அமர்ந்துள்ள அரசு - தன்னைப் பலப்படுத்தி, தன்மீது மேலாதிக்க அழுத்தங்களைச் செலுத்தவல்ல உதிரிக்கட்சிகளின் ஆதரவிலேயே தங்கியிருக்கவேண்டிய பரிதாபகரமான நிலையில் தடுமாறிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் ஜே.வி.பியின் பேரம்பேசல் அச்சுறுத்த லானது அதற்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தவே செய்யும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ளான கட்சி களின் மேலாதிக்கப்போட்டி - ஸ்திரமற்ற அரசொன்றின் ஆட்சிக்கே வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

## நாடும் நடப்பும்




# வெளிநாட்டு நாணயங்களை கடத்தும் முயற்சி முறியடிப்பு!

169 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்க ளைக் கடத்தும் முயற்சியொன்று கட்டுநாயக்க விமானநிலைய சுங்கப் பிரிவினரால் முறியடிக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

இநதச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - சிங்கப பூர் எயர்லைன்ஸ் விமானத்தில் சிங்கப்பூருக்கு பயணத்தை மேற்கொள்ளவிருந்த பயணி ஒருவரே இந்த வெளிநாட்டு நாணயங்களை சிங்கப்பூருக்குக் கடத்த முயன்றுள்ளார்.

இந்தப் பயணி மீது சந்தேகம் கொண்ட கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் அவரைச் சோதனையிட்டபோது - இந்த நாணயங்கள் அவரது பயணப்பொதியிலும், உடம்பிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட நாணயத்தாள்களில் - யூரோ, ஸ்ரேலிங் பவுண், ஜப்பான யென், சுவிஸ் கோரன், அமெரிக்கப் பிரயாண காசோ லைச்சீட்டு ஆகியன காணப்பட்டன. இவை சிங்கப்பூரிலுள்ள ஒருவருக்கு ஒப்படைக்கப்படஇருந்தனவென ஆரம்ப விசார ணையின்போது தெரியவந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவிக் கின்றனர்.

# 5 மாகாண சபைக்கான தேர்தல் ஒரே தினத்தில்!

வெவ்வேறு தினங்களில் பதவிக்காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை, ஒரே தினத்தில் நடத்துவது தொடர்பாக தேர்தல் திணைக்களம் பரசீலித்து வருவதாகப் பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்களில் இடம்பெறும் தேர்தல் வன் முறைகளைக் கட்டுப்படுத்தும் பிரதான இலக்கைக் கருத்திற் கொண்டே இந்த விடயம் பரிசீலிக்கப்படுகிறது.

இதன்படி - ஊவா, மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் மேல்மாகாண சபைகளுக்கான தேர்தலே ஒரேதினத்தில் நடை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாணசபைத் தேர்தலின் பின்னர், ஜூலை மாதமளவில் இந்த 5 மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறக் கூடும் எனத் தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊவா மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான பத விக்காலம் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியும், சப்ரகமுவ மாகாணசபையின் பதவிக்காலம் மே 4 ஆம் திகதியும், மேல்மாகாண சபையின் பதவிக்காலம் மே 5 ஆம் திகதியும், வடமத்திய மாகாணசபையின் பதவிக்காலம் மே 6 ஆம் திகதியுடனும் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணிவெடி அகற்றும் பணி திருமலையில் மீண்டும் ஆரம்பம்

திருகோணமலை மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றும் பணி இந்த மாத நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழுவின் தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவர் தெரிவித்தார்.

திரியாய் கிராமத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றும் பணியினை மேற்கொண் டதை அடுத்து, கடந்த பத்து மாதங்களுக்கும் மேலாக கன் னியா கிராமத்தில புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளை அகற் றும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கெனப் பயிற்றப்பட்ட 30 உள்ளூர் இளைஞர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனால், இந்தப்பணிகள் இடைக்கால விடுமுறைக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலை யிலேயே, மீண்டும் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடிகள் அகற்றப்படுவதைத் தொடர்ந்து கன்னியா கிராமத்தின் மீள்குடியேற்றப் பணிகள் துரிதகதியில் மேற்கொள் ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் பொதுத் தேர்தலில் வெற்றிபெறவில்லை

நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தலில் மத்திய மாகாண சபையில் உறுப்பினர்களாகவுள்ள 15 பேர் போட்டியிட்டபோதும் ஒருவர்கூட நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை.

கண்டி மாவட்டத்தில் 6 உறுப்பினர்களும், நுவரேலியா மாவட்டத்தில் 5 உறுப்பினர்களும் மாத்தளை மாவட்டத்தில் 4 உறுப்பினர்களும் பொதுத்தேர்தலில் போட்டியிட்டனர். ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவரான சரத் எக்கநாயக்க, உறுப்பினர்க ளான மகிந்த அபயக்கோன், சுனில் அமரதுங்க ஆகியோரும் ஐக்கிய தேசிய முன்னணியில் - மத்திய மாகாண சபைத் தலைவர் துரை மதியுகராஜா, மகிந்த விஜேசிறி, ஸ்ரீயானி டேனியல் ஆகியோரும் போட்டியிட்டனர்.

நுவரேலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உறுப்பினர்களான - ஜயரத்ன திஸநாயக்க, டபிள்யு.ஜீ.ரணசிங்க ஆகியோரும் ஐக்கிய தேசிய முன்னணி யில் மகிந்த தெல்பிட்டியவும், மலையக மக்கள் முன்னணி யின் சார்பில் சபையின் பிரதித் தலைவர் எம்.சிவலிங்கம், எஸ்.அருள்சாமி ஆகியோரும் போட்டியிட்டனர்.

மாத்தளை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் எம்.சிவஞானம் போட்டியிட்டிருந்தார்.

இதேவேளை மாத்தளை மாவட்டத்தில் ஜே.வி.பியின் சார்பாக கூட்டணியில் போட்டியிட்ட சுஜாதா அழகக்கோன் என்ற பெண் மாத்தளை வரலாற்றில் முதல் பெண் நாடாளு மன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளதுடன், 57 ஆயிரத்து 234 விருப்புவாக்குகளையும் பெற்றுள்ளார். இவர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் அமர்க்களம்... திரு.த.திரு

# அதிகாரப் போட்டி அறிக்கைப் போட்டி நகைச்சுவை அரங்காகும் அரசியல் களம்

சிறிலங்காவின் அரசியல் இழுபறியை நோக்குகின்ற நிலையில் - மூஞ்சூறு தான் போக வழியில்லை விளக்குமாறையும் கொண்டுபோக வெளிக்கிட்டதாம் என்ற மாதிரியே தெரிகின்றது. நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க இன்னமும் வக்கில்லாமல் இருக்கும் அவசரப்பதவியேற்ற சிறிலங்காப் பிரதமர் அளிக்கும் வாக்குறுதிகளோ நகைப்புக்கிடமானதாக உள்ளது.

இதற்காகத்தான் ஒரு பொம்மையைப் பிரதமராகப் போட ஜே.வி.பியினரும் சந்திரிகாவும் நினைத்திருந்தனர். இவற்றை உடைத்து கட்சியைவிட்டு வெளியேறுவேன் என மிரட்டி மகிந்த ராஜபக்ஷ கட்சியால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமோ இல்லையோ, அவசரமாகப் பிரதமர் பதவியை ஏற்றுவிட்டார். இப்பொழுது சந்திரிகாவுக்கே உலை வைக்கும் அளவுக்கு அவர் மாறி விட்டார்.

6 மாதங்களுக்குள் ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பேன். தேர்தல் முறையை மாற்றுவேன் என்றெல்லாம் ராஜபக்ஷ அறிக்கைவிடுகின்றார். 2 ஆண்டுகளின் முடிவில் அதாவது தனது பதவிக்கால முடிவில் இருக்கின்ற செல்வாக்கைப் பொறுத்தே நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது பற்றிய முடிவை சந்திரிகா எடுக்கவுள்ளார்.

ஆனால், இதற்குள் அவரின் முடிவினை ராஜபக்ஷ எடுக்கமுனைவதாக அவர் விடும் அறிக்கைகள் காட்டுகின்றன. ஒரே கட்சியினர் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருக்கின்றபோது, அங்கு பிரதமர் அதிகார மற்றவர்போல ஜனாதிபதியின் சொற்படியே நடப்பார். ஆனால், இங்கு மகிந்த ராஜபக்ஷ கொஞ்சம் தனித்த செயற்பாட்டுக்கு முனைவதாகத் தெரிகின்றது. இது கிட்டத்தட்ட ராஜபக்ஷ - ஜே.வி.பி, சந்திரிகா என்ற இரு துருவங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளலாம்.

மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை சந்திரிகாவைத் தொடர்ந்து தானே தலைமைக்குரவு உழைப்பது தெரிகின்றது. இதனை சந்திரிகா விரும்பமாட்டார். பண்டாரநாயக்க குடும்பத் தலைமை முடிவுக்கு வருவதை அவர் நிச்சயம் விரும்பமாட்டார். முன்னர் அநுரா பண்டாரநாயக்க பிரதமராக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. அநுராவும் அதனைத் தீவிரமாக நம்பி வந்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடு கட்சியில் ஒரு சதிப்புரட்சி என்றே பார்க்கப்பட வேண்டும். கட்சியில் தொங்குநிலையில் சந்திரிகா உயிரினைத் தொண்டைக்குள் வைத்துக்கொண்டிருப்பதான நிலையை உருவாக்கி விட்டுள்ளது.

மேலும், மகிந்த ராஜபக்ஷ தன் கருத்துக்கு முடிவுகளை அறிவிக்கத் தொடங்கி விட்டார். அவர் ஒரு வலுவான சக்தியாக மேலும் மாறுகின்றார். தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பில் அவரின் வாக்குறுதிகள், அறிவிப்புகள், முன்னுக்குப்பின் முரணாகவும் நகைப்புக்கிடமானதாகவும் உள்ளது. தமிழ்மக்கள் பிரச்சினை, சமாதான நடவடிக்கையில் இந்தியா முழுமையாகப் பங்களிக்கும் என்கிறார்.

அதேவேளை, நோர்வேயின் பங்களிலுப்பிலும் குறைவராது என்கிறார். இது எத்துணை முரண்பாடானது. இதுவரை இந்தியா புகழ்பாடி இந்தியாவுக்குச் செல்ல ஆயத்தமாகி, இந்தியத் தூதுவரையே சந்தித்துவரும் மகிந்த ராஜபக்ஷ - நோர்வேயுடன் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்தவில்லை. கடைசி நோர்வே தூதுவரைக் கூடச் சந்திக்கவில்லை.

அதேவேளை கதிர்காமரும், தானும் இருக்கின்றேன் எனக் காட்ட - சமாதான நடவடிக்கையில் இந்தியா நேரடியாகப் பங்களிக்க வேண்டும் என்று அறிக்கை விடுகின்றார். இப்பொழுது இந்தியாவோ 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலையில் உள்ளது.

ஏனெனில், சிறிலங்காவின் தேர்தல் முடிவுகள் அதற்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. அதேவேளை, இந்தியாவில்கூட அடுத்த ஆட்சி பற்றிய குழப்பம் இன்னமும் இருக்கவே செய்கிறது. ஆனால், இலங்கை நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க வக்கில்லாது அல்லாடிக்கொண்டிருக்கும் சந்திரிகாவின் பிரதமரோ - தமிழர் பிரச்சினையில் இந்தியா அபயம், இந்தியா அபயம் என்று குளறிக்கொண்டிருக்கின்றார். அவர்களைப் பொறுத்தவரை தமிழர் பிரச்சினையில் சமாதான நடவடிக்கையில் நோர்வே அனுசரனையைத் தொடர்ந்தால், விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி வரைபினைப்பற்றிப் பேசி, அதன்படி அதனை வழங்கவேண்டிய அழுத்தம் ஏற்படும் என்று பேச்சுக்களை 'அ' இல் இருந்து தொடங்குவதற்காக இந்தியாவின் நேரடிப் பங்களிப்பை அவர்கள் கேட்கிறார்கள்.

அதனால்தான் பேச்சளவில் நோர்வே பங்களிப்பு என்று கூறிக்கொண்டு, நோர்வேயை நிராகரிக்க முயல்கின்றனர். அதற்கு இந்தியாவின் ஒரு வாக்குறுதியைப் பெறுவதற்காகவே மகிந்தவும், கதிர்காமரும் இந்தியாவிடம் அபயக்குரல் எழுப்பிவருகின்றனர். இந்தியா வாக்களித்ததும் நோர்வே பங்களிப்பு என்பது துண்டிக்கப்படும். ஆக, தமிழ் மக்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை, அதற்கு தமிழ்மக்கள் வழங்கிய ஆணையை மேற்குலகம் ஏற்கிறது.

ஆனால், சந்திரிகா அணியினர் ஏற்கவே இல்லை. சந்திரிகா அணியினரில் ஜே.வி.பி. நிலைப்பாடு, மகிந்தவின் நிலைப்பாடு - தமிழ் மக்களின் உரிமைகளை, கருத்துக்களை, ஆணையை ஏற்கத் தயாராகவில்லை என்பதை தெளிவாகக் காட்டுகின்றது. ஆகவே, தேர்தல் விஞ்ஞாபனப்படி தமிழ் மக்கள் பிரிந்துபோதற்கான நிலைமைகள் பற்றி ஆழமாக சிந்திக்கவேண்டிவரும். தமிழர் விவகாரம் தொடர்பான சந்திரிகா அணி ஆடும் நாடகம், அதற்கு நாடாளுமன்ற உலக உறவுரீதியாகக்கூட நெருக்கடிகளை கொண்டு வரும். சரி இப்படி அறிக்கைகளை விடுகின்ற சந்திரிகாவின் அதிகாரத்துக்கே உலை வைக்கின்ற மகிந்த, எத்தனை நாள் ஆட்சியில் நீடிக்கப்போகிறார்.

22 ஆம் திகதி யன்றேகூட பெரும்பான்மையைக் காட்டுவாரா என்பது கேள்வி. அதுதான் இல்லாவிடினும்கூட எத்தனை நாள் இவர்களின் வலிந்த ஒற்றுமை நீடிக்கப்போகின்றது. தன் ஆட்சியை நிறுத்த பெரும்பான்மையை நிரூபிக்கவே வக்கில்லாமல் இருக்கும் மகிந்த, தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்றும், ஜனாதிபதி அதிகாரமாற்றம் என்றும் அறிக்கைகளை விடுகின்றார். மூஞ்சூறுக்குத் தான் போகவே வழியில்லை அதற்குள் விளக்குமாற்றையும் கொண்டுசெல்லப் புறப்பட்ட கதையாகவே மகிந்தவின் நடப்பு இருக்கின்றது. இலங்கையின் அரசியல் ஒரு நகைச்சுவைக் களமாகவே இப்பொழுது எல்லோருக்கும் தெரிகின்றது.

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XLVI சிவா சின்னப்பொடி

# தமிழ்ப் பெண்களுக்கெதிரான மிரட்டல்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழனால்

**அ**து பிரான்ஸின் 95 ஆவது நிர்வாகப் பிரிவிலுள்ள ஒரு நகரம். குஷன் வீல் (**Goussain Ville**) என்பது அதன் பெயர். பாரிஸ் நகரத்திலிருந்து 18 கிலோமீற்றர் தொலைவில் **REL 'D'** விரைவில் தொடருந்து வழித்தடத்திலுள்ளது.

அரச வம்சாவழி மக்களை அதிகமாகக் கொண்ட அந்த நகரத்தில், நூற்றுக்கும் அதிகமான தமிழ் மக்கள் சொந்த வீடுகள் வாங்கி வசித்து வருகின்றார்கள்.

அந்த நகரத்தில் நீண்டகாலமாக வசித்து வந்த ஒரு தமிழ்குடும்பம் - தங்கள் வீட்டில் திருத்தவேலைகளைச் செய்வதற்குத் தமிழ் இளைஞர் குழுவொன்றை அழைத்திருந்தது.

நல்லவர்கள்போல நடித்த அந்த இளைஞர் குழுவினர் - அந்தக் குடும்பத்தினருடன் நெருங்கிப்பழகி, வீட்டு நிலமையை நோட்டம் விட்டனர். குடும்பத் தலைவர் காலை 7 மணிக்கு வேலைக்குச் சென்றால் இரவு எட்டுமணிக்குத்தான் வீட்டுக்கு வருவார். குடும்பத் தலைவியும் காலை 8 மணிக்கு வேலைக்குச் சென்றால், வீட்டுவருவதற்கு மாலை 4 மணி ஆகிவிடும்.

14 வயதான ஒரேஒரு பெண் குழந்தையும், 8 வயதான ஆண்குழந்தையும் அருகிலுள்ள பாடசாலைக்குச் செல்வது வழக்கம். அந்தக் குழந்தைகள் இருவரும் மதிய உணவைப் பாடசாலையிலேயே சாப்பிடுவது வழக்கம். இதையெல்லாம் நன்கு தெரிந்துவைத்துக்கொண்ட அந்த இளைஞர் குழு - ஒருநாள் அயலவர்கள் எவருக்கும் சந்தேகம் வராதவகையில் வீட்டில் வேலை செய்பவர்களைப்போல வீட்டுக்குள் புகுந்து நகைகள் மற்றும் பெறுமதி மிக்க பொருட்களைக் கொள்ளையடித்தது. இவ்வாறு கொள்ளையடித்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்த வீட்டுச் சிறுமி அன்று மாலை நேர வகுப்புக்கள் இல்லாத காரணத்தினால் பாடசாலையிலிருந்து திடீரென்று வீட்டுக்குள் வந்துவிட்டாள்.

14 வயதான அந்தச் சிறுமியை அந்தக் கொள்ளையர்கள் மடக்கிப்பிடித்து பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய பின்னர், கழுத்தை நெரித்து கொலைசெய்துவிட்டு, கட்டிலுக்கு அடியில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்.

குப்பைகள் கட்டும் பை ஒன்றில் கொள்ளையடித்த நகைகளையும் பொருட்களையும் போட்டுக்கட்டி, தொடருந்தில் எடுத்துச் சென்றபோது திடீர்சோதனையில் ஈடுபட்ட காவல் துறையினரிடம் இந்தக் கொள்ளையர் தலைவர் பிடிபட்டுவிட்டான்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற காலத்தில் பாரிஸ்நகர மெத்திரோ நிலையங்களில தீவிரவாதிகள் வெடிகுண்டுகள் வைக்கப்போவதாக மிரட்டல்கள் விடுத்திருந்தனர். இதனாலேயே மெத்திரோ மற்றும் தொடருந்து நிலையங்களில் காவல்துறையினர் திடீர் சோதனைகளை நடத்தி வந்தார்.



இந்தக் கொள்ளையர் தலைவனைக் காவல் துறையினர் கைதுசெய்தபோது, இது ஒரு சாதாரண கொள்ளைச் சம்பவம் என்று நினைத்து குற்றத்தடுப்புக் காவல்துறையினரிடம் ஒப்படைத்துவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டுத் தலைவி - காவல்துறையினருக்கு முறைப்பாடு செய்தபின்னரே, காவல்துறையினரால் கட்டிலுக்கடியில் போடப்பட்டிருந்த அந்த சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அந்தப் பகுதி (குசான் வீல்) காவல்துறையினர், பாரிஸிலுள்ள மத்திய குற்றப்புலனாய்வு தகவல் மையத்திற்கு தகவல் அனுப்பிய பின்னர்தான், பாரிஸ் நகரத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட நபர் தான் இந்தக் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் சூத்திரதாரி என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் ஐரோப்பாவிலிலுள்ள தமிழர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஐரோப்பியாவிலுள்ள அனைத்துத் தமிழ் ஊடகங்களும் இந்தச் சிறுமியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட அன்று சோக இசை எழுப்பியும், அஞ்சலிக்கட்டுரைகளையும், மலர்களையும் வெளியிட்டும் தமிழ் மக்களின் உணர்வுகளை வெளியிட்டன.

சிங்கள இராணுவம் மட்டுமல்ல - தமிழனே தமிழ் பெண்குழந்தையை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் கொடுமை புலம்பெயர்ந்த தமிழ் மக்களை கொதித்தெழ வைத்தது.

பின்னர் பாரிஸ் நகர காவல்துறையினர் மேற்கொண்ட விசாரணைகளில் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை, ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளில் வழங்குத் தொடரப்பட்டது.

நீண்டநாட்களாக நடந்த இந்த வழக்கு விசாரணை இறுதியில் முதலாவது எதிரிக்கு அதாவது குழுத் தலைவனுக்கு கொலை, பாலியல்வல்லுறவு, கொள்ளை ஆகிய மூன்று குற்றங்களுக்குமாக 22 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஏனைய இரண்டு குற்றவாளிகளுக்கும் 16 மற்றும் 12 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

30 முதல் 32 வயதான அவர்களின் தண்டனைக் காலம் முடிந்தபின்னர் குறிப்பாகச் சொன்னால் அவர்களது இளமைக் காலம் முடிந்தபின்பு - நாட்டுக்கு திருப்பதியனுப்பப்படுவார்கள்.

பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் 5 முதல் 10 வருட காலத்திற்கு அரசியல் தஞ்சக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு வதிவிட அனுமதி வழங்குவது வழக்கம். இந்தக் கால எல்லை முடிந்ததும் முன்பெல்லாம் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் அது புதுப்பித்துக் கொடுக்கப்பட்டது. ஆனால், குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் விடயத்தில் இந்தத் அனுமதியை புதுப்பித்துக் கொடுக்காமல், அவர்களின் தண்டனைக் காலம் முடியும்வரை சிறையில் வைத்திருந்து அவர்களது சொந்த நாட்டுக்கு நாடு கடத்தும் நடைமுறையை பெரும்பாலான நாடுகள் கடைப்பிடித்து வருகின்றன.

பாரிஸில் நடந்த இந்தச் சம்பவத்தைப் போல சுவிஸின் பார்ஸல் நகரத்திலும் ஒரு சம்பவம் நடந்தது.

தாய், தந்தையரைவிட்டு விலகி தனித்து வசித்துவந்த ஓர் 23 வயது தமிழ்ப்பெண்- 2000 ஆம் ஆண்டு இனம் தெரியாதவர்களால் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார்.

இந்தப் பெண்ணின் கொலை தொடர்பாக துப்புத்துலக்க உதவுமாறு சுவிஸ் காவல் துறையினர் தமிழ் மக்களுக்கு தமிழ் ஊடகங்கள்மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

தனது 10 ஆவது வயதில் பெற்றோருடன் சுவிஸுக்குச் சென்ற இந்தப் பெண், 1996 ஆம் ஆண்டு தனது பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக தனது காதலனுடன் சென்று தனிக் குடித்தனம் செய்து வந்ததாகவும், இரண்டு வருடங்களில் அவர்களுக்குள் பிரிவு வந்து பிரிந்துவிட்டதாகவும் காவல் துறையினரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தப் பெண் வேறொரு இளைஞரை திருமணம் செய்ய முடிவுசெய்திருந்த நேரத்திலேயே கொலைசெய்யப்பட்டதாகவும், அவரது முன்னாள் காதலனே அவரைக் கொலை செய்திருக்கவேண்டும் என்று சுவிஸ் காவல் துறையினர் சந்தேகப்பட்டனர்.

அந்த நபர் சுவிஸை விட்டு தப்பிச் சென்றதால், அவரைப் பிடிக்க உதவுமாறு பின்னர் தமிழ் ஊடகங்கள்மூலம் சுவிஸ் காவல் துறையினர் அறிவித்தல் விடுத்தனர்.

பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க் என்று பல நாடுகளில் 1995 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல், பாலியல் வல்லுறவு, கொலைகள் என்று பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

சில இடங்களில் பெண்களை வலுக் கட்டாயமாக கடத்திச் சென்று ஏமாற்றி அல்லது பயமுறுத்தி திருமணம் செய்த சம்பவங்களும் நடந்திருக்கின்றன.

உண்மையில் இந்தச் சம்பவங்களை விலாவாரியாக எடுத்து ஆராய்ந்து பார்த்தால், தமிழ் சினிமாவின் தாக்கம் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தை எவ்வளவு பாதித்திருக்கிறது என்பது தெரியவரும்.

ஒரு பெண் தனது தந்தை தன்னை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்தார் - தாய் அதற்கு உடந்தையாக விருந்தார் என்று காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்தால் எப்படி இருக்கும்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் அவலத்தின் உச்சங்களில் ஒன்றான இந்தச் சம்பவம் 1996 ஆம் ஆண்டு பாரிஸில் நடந்தது.
(தொடரும்)

# ஈராக் ஆளும் சபையின் முயற்சியால் பலூஜா நகரில் போர் நிறுத்தம்!

(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் படைகளுக்கும் போராளிக் குழுக்களுக்குமிடையே தாக்குதல்கள் நடைபெற்றுவரும் நிலையில், அந்த நாட்டு ஆளும்சபை அதி



காரிகளால் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் பின் நகரில் அமைதி நிலவுவதாகவும், 12 மணித்தியாலங்கள் வரையிலான போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத்தின் தென்பகுதியில் அமெரிக்க அபாச்சி ஹெலிகொப்ரர் சுட்டுவீழ்த்தப்பட்ட பின்னரே இந்த தற்காலிக போர்நிறுத்தம் ஆரம்பித்துள்ளது.

அபு ஹரப் எனப்படும் ஈராக்கிய நகரில் அமெரிக்க ஹெலிகொப்ரர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர் அந்தப் பிரதேசத்தில் பலத்த தாக்குதல்களை அமெரிக்கப் படையினர் மேற்கொண்டிருந்தனர்.

சுட்டுவீழ்த்தப்பட்ட ஹெலிகொப்ரரில் பய



ணம் மேற்கொண்டிருந்த விமானிகள் தொடர்பான தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லையென அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

பலூஜாவில் இடையிடையே நடைபெற்று வரும் துப்பாக்கிப் பிரயோகங்களால் மக்கள் அந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

சனி முஸ்லிம் மதத்துக்கு ஆதரவான போராளிக்குழுக்கள் அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறாது போராடி வருகின்றனர். இதேவேளை, மக்களை குழுக்களாக தெருக்களில் காண நேரும் சந்தர்ப்பங்களில் அமெரிக்கப் படையினர் அம்மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தமது வீடுகள் குண்டுத் தாக்குதலினால் சேதமடையும் வேளையிலும், உயிரிழப்பு, காயம் ஆகியவற்றினால் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே தமது வீடுகளிலிருந்து வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்த உடல்களை தமது வீடுகளுக்கு அருகில் மக்கள் புதைத்து வருகின்றனர். இதனிடையே சமரசப் பேச்சுக்களுக்கு மத்தியஸ்தர்களாக கடமையாற்றும் குவாட்டன் அல் ரபாயி தெரிவித்த கருத்தில் முஸ்லிம் பழங்குடி மக்களின் தலைவர்களூடாக போர் நிறுத்தம் தொடர்பான தகவல்களை போராட்டத்தை மேற்கொண்டு வருபவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், போர்நிறுத்தம் அமெரிக்கக் கடற்படையினர் பலூஜா நகரிலிருந்து வெளியேறுவதற்கு உதவலாமென ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஆளும் சபையில் வேறொரு அங்கத்தவர் மொகமட் ஒத்மன் தெரிவிக்கும் போது அமெரிக்கப்படையினர் பலூஜாவிலிருந்து வெளியேறுவார்கள் என்பதில் தனக்கு நம்பிக்கையில்லையெனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பலூஜாவில்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அமெரிக்கப்படையினர் அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேற வேண்டும் என பத்திரிகை செய்தி ஸ்தாபனத்துக்கு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அமெரிக்கப் படையினர் பலூஜா நகரிலிருந்து வெளியேறாவிட்டால் தாம் பிடித்துவைத்திருக்கும் அமெரிக்கரான தோமஸ் ஹமிலை சுட்டுக்கொல்லப் போவதாக முஸ்லிம் போராளிகள் அச்சுறுத்தியுள்ளனர்.

# அமெரிக்க புலனாய்வு பிரிவினரால் செப்ரெம்பர் 11 தாக்குதல் பற்றி முன்னரே தெரிவிக்கப்பட்டதாம்!



அல் - கொய்டா அமைப்பினால் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற தகவலை செப்ரெம்பர் 11 தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்ததாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக குழு இந்தத் தகவல்களை பொதுமக்களுக்கு தெரிவிக்குமாறு வேண்டியுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் எழுதப்பட்டிருந்த குறிப்பில் 1997 ஆம் ஆண்டிலிருந்தே தாக்குதல் ஒன்றினை அமெரிக்கா மீது மேற்கொள்ள அல் - கொய்டா திட்டமிட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அந்த குறிப்புக்களில் பின்லேடன் தொடர்பான சரித்திரத் தகவல்களே அடங்கியிருந்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

சென்ற வியாழக்கிழமை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டோலீசா செப்ரெம்பர் 11 தொடர்பான ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிக்கும் போத பின்லேடனின் முன்னைய சரித்திர தகவல்களே குறிப்பில் அடங்கியிருந்ததாகவும் அமெரிக்காவினுள் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதற்கான தகவல்கள் அடங்கவில்லை என தெரிவித்தார்.

ஆயினும் பின்லேடன் சில வருடங்களாக அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டு வந்துள்ளார் என அறியமுடிந்ததாக கொண்டோலீசா மேலும் குறிப்பிட்டார்.

## உலக நோக்கு

# இந்தோனேஷிய தீவில் அமைந்த தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு ஏழு கிறிஸ்தவர்கள் காயம்!

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய தீவான சலவெசியில் தேவாலயமொன்றில் ஈஸ்டர் பண்டிகை நடைபெற்றவேளை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஏழு பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில் தேவாலயத்தில் பிரார்த்தனை நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் இரு துப்பாக்கிதாரிகள் உள்ளே நுழைந்து சரமாரியாகச் சுட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு பலமான காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம் - கிறிஸ்தவ தலைவர்களிடையே 2001 இல் சமாதான ஒப்பந்தமொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை நடந்த வன்செயல்களில் இந்தோனேஷியாவில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரு வருடத்துக்கு முன்னர் பாலித்தீவில் குண்டுவெடிப்பினை மேற்கொண்டவர்களே இந்த மதக்கலவரங்களுக்கும் காரணமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வெளிநாட்டவர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் எதிர் விளைவுகளை உருவாக்குவதால், இந்தோனேஷியாவை முஸ்லிம் நாடாக மாற்றுவதற்காகவே கிறிஸ்தவ தேவாலயங்களில் இந்த வகையான தாக்குதல்களை ஜெமா இஸ்லாமியா எனப்படும் குழுவினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் ஆட்சியைப் பாதுகாக்க மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## அந்நாட்டு ஜனாதிபதி கோரிக்கை



மக்கள் ஆட்சியை நைஜீரியாவில் பாதுகாப்பதற்கு குடிமக்கள் ஒத்துழைக்கவேண்டுமென தனது ஈஸ்டர் செய்தியில் நைஜீரியாவின் ஜனாதிபதி ஒலுசெகுன் ஒபசன்ஜோ தெரிவித்தார்.

அண்மையில் இராணுவத் தலைமைப்பீடத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் சிலர் ஜனாதிபதி ஒலுசெகுனை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

1999 ஆம் ஆண்டில் பதவியேற்ற ஜனாதிபதி ஒபசன்ஜோ நாட்டின் எதிர்காலம் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொள்வதில் தங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

முன்னாள் சர்வாதிகாரி சனி அபசாவின் பிரதம பாதுகாப்பு அதிகாரியான கம்சா அல் முஸ்தபா இச் சதி முயற்சியுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து நைஜீரியா சுதந்திரம் பெற்றுக்கொண்டதிலிருந்து 6 தடவைகள் இராணுவப் புரட்சிகள் நடைபெற்றுள்ளன.

# இஸ்ரேல் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலஸ்தீன சிறுமி பலி!

காஸாவில் அமைந்துள்ள தனது சொந்த வீட்டில் இருந்த 12 வயது சிறுமி இஸ்ரேல் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாக பலஸ்தீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலியக் குடியேற்றமான குஷ் கபீலில் அமைந்துள்ள காவல் கோபுரத்தில் இருந்து சுடப்பட்டபோதே கான் யூனிஸ் என்ற நகரத்தை சேர்ந்த இமான் துல்பா என்ற 12 வயது சிறுமி தனது சொந்த வீட்டில் வைத்து கொல்லப்பட்டார்.

மேலும் அந்தச் சிறுமி உடன் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டும் மரணமடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தலையில் ஏற்பட்ட சூட்டுக் காயத்தால் இவர் உயிரிழந்ததாக சொல்லப்பட்டாலும், இஸ்ரேலிய இராணுவம் இதைப் பற்றி ஆராய்வதாகத் தெரிவித்துள்ளது.

தென் காஸாவில் அமைந்துள்ள இந்த இரு இடங்களிலும் அடிக்கடி பயங்கரவாத சம்பவங்கள் நடப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய படையினர் குஷ் கபீல் என்ற



தமது குடியேற்றத் திட்டம் ஒன்றில் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டடத்தில் இருந்து சுட்டபோது இச்சம்பவம் இடம்பெற்றதாக உயிரிழந்த சிறுமியின் உறவினரான அலா தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இமான் பாடசாலையில் இருந்து திரும்பியதாகவும், மதிய உணவை உண்பதற்காக சமையலறைக்குச் சென்றபோதே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்ததாகவும் விபரித்தார்.

# ரஷ்யாவில் கடத்தப்பட்ட வைத்தியர் விடுதலையானார்

செச்னியாவில் 2002 ஆம் ஆண்டு துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட டச்சு வாசியான வைத்தியர் ரஷ்யாவின் தென்மாகாணமான தாஜிஸ்தானில் விடுவிக்கப்பட்டார்.

உதவி வழங்குகின்ற நிறுவனங்களில் ஒன்றான எம்.எஸ்.எவ் நிறுவனத்தைச் சேர்ந்த அர்ஜான் எரேக்கல் என்ற வைத்தியரே ரஷ்யாவின் தென்மாகாணமான தாஜிஸ்தானில் விடுவிக்கப்பட்டவராவார்.

இந்தத் தகவலை மேற்படி நிறுவனம் வெளியிட்டது. இதனை டச்சு, ரஷ்ய வெளிநாட்டு தூதுவராலய அதிகாரிகள் உறுதிசெய்தனர்.

அவர் திடகாத்திரமாக இருப்பதாகவும், உடனடியாக தாஜிஸ்தானின் தலைநகரான மாகாசிகலாவுக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும், அந்த நிறுவனம் உத்தியோகபூர்வமாக செய்தியை வெளியிட்டது.

இந்த நிறுவனம் கடந்த ஜனவரி 2001 ஆம் ஆண்டிலிருந்து தமது வைத்தியசேவையை நிறுத்தியிருந்தது. இதற்கு அதிகாரிகளின்



கடத்தல்களே காரணமென சொல்லப்பட்டது. முக்கியமாக அதன் தலைவர் கெனடி குழுக்காலின் ஜனவரி 2001 இல் கடத்தப்பட்டமை ஒன்றாகும்.

மேலும் அர்ஜான் எரேக்காலின் விடுதலைக்கு எதுவித கப்பமும் கேட்கப்படாமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தேசியப் பட்டியல் தெரிவுமுறை சட்டமா அதிபருடன் பேசப்படும்!

## உதவித் தேர்தல் ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

தேசியப் பட்டியலில் பெயர் இல்லாத ஒருவர், தேசியப் பட்டியல் மூலம நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படவேண்டுமென அரசியற் கட்சிகள் தேர்தல் திணைக்களத்தைக் கேட்டால், அது தொடர்பாக- சட்டமா அதிபருடன் தேர்தல் திணைக்களம் கலந்துரையாடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும், இவ்வாறான ஒரு விடயம் தொடர்பாக, எந்தக் கட்சியும் தம்மிடம் கேட்கவில்லை எனவும், ஆனால் - அடுத்து வரும் தினங்களில் கேட்டால் நாம் சட்டமா அதிபருடன் இது தொடர்பாக கலந்துரையாடுவோம் என, உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன், முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நாடாளுமன்றம் செல்ல வைப்பதற்காக, இந்த வர்த்தமானியில் உள்ள ஒருவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுமாறு கட்சி கேட்கவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு, நாடாளுமன்றம் செல்லும் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை நாடாளுமன்ற சபாநாயகர் பதவியில் தான் அமர்த்தவுள்ளதாக ஹெல உறுமயவினருடனான சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

இதேவேளை - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர்- பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிக்கையில் -

முன்னர் தேசியப் பட்டியலில் பெயர் இல்லாது, தற்போது தேசியப் பட்டியல் மூலம் ஒரு கட்சியைச் சார்ந்தவர் தெரிவு செய்யப்பட வேண்டுமென எந்தக் அரசியற்கட்சி கேட்டாலும், அதற்கு அனுமதிக்கக் கூடாதென கடந்த புதன்கிழமை ஆணையாளருக்குக் கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போது நாம் தேர்தல் ஆணையாளரின் முடிவுக்காகக் காத்திருக்கிறோம். அவர் எமது இந்தக் கோரிக்கையை தவிர்த்து, ஏதாவது நடவடிக்கையை எடுத்தால் அதற்கு எதிராக நாம் சட்ட நடடிக்கையை எடுக்க வேண்டி வருமென கூறி வைக்க விரும்புகிறேன் என்றார் பாக்கியசோதி சரவணமுத்து.

இதேவேளை - முன்னர் தேசியப் பட்டியலில் இடம்பெற்றிராத முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் எதிர் வரும் 22 ஆம் திகதிக்குப் பின்னர் தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதி நியமித்திருக்கும் குழு கிழக்கு நிலை குறித்து அறிக்கை

கிழக்கில் நடைபெற்றுவரும் மோதல்களையடுத்து அங்கு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு நேற்று கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து- நிலைமைகளை ஆராய்ந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவினருக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை மேற்கொண்டுவரும் தாக்குதலையடுத்து, அங்கு பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து வருகின்றன.

இவ்வாறு இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு உதவுவதற்காகவும், கிழக்கு நிலைமை குறித்து ஆராய்வதற்காகவும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரது முன்னாள் செயலாளர் பாலபட்ட பெண்டி தலைமையிலான குழு ஒன்றை நியமித்திருந்தார்.

இக்குழுவினர் நேற்று வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனவுடன் திருமலை மாவட்டத்துக்குச் சென்றுள்ளது.

அவர்கள் - நேற்று இடம்பெயர்ந்து சிரமப்படும் மக்களைப் பார்வையிட்டதுடன் அவர்களுக்கு உதவி புரிவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

மக்களின் சிரமங்கள் குறித்து ஜனாதிபதி செயலகத்துக்கு அவர்கள் அறிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(10)

# அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு புதிய அரசாங்கம் நடவடிக்கை!

## ஜனதாஸ பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு ஒன்றை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முக்கியத்துவம் அளிக்கும் என்றும் -

இதை நோக்கமாகக் கொண்டே ஜனாதிபதி சந்திரிகா, அரசமைப்பு விவகார அமைச்சை தானே வைத்திருக்கிறார் என்று - நாடாளுமன்ற உறுப்பினர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

புதிய அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கு ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன. உத்தேச அரசியல் யாப்பை வகுப்பதற்கு நாடாளுமன்றம், அரசியல் அமைப்பு நிர்ணய சபையாக செயற்படும்.

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விடுத்தகோரிக்கைக்கு அமைய, மக்கள் இதற்கான ஆணையை வழங்கியுள்ளார்கள்.

தற்போதைய தேர்தல் முறை, மக்களின் ஆணையை சரிவர பிரதிபலிக்காத போதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்துள்ளன.

பொதுத்தேர்தலில் 22 மாவட்டங்களில் 16 மாவட்டங்களிலும், மற்றும் 160 தேர்தல் தொகுதிகளில் 106 தொகுதிகளிலும் வெற்றிபெற்றதன் மூலம்- இது உறுதிப்படுத்தபட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அரசியல் அமைப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும். பின்னர் - உயர் நீதிமன்ற சிபார்சுடன் பொதுஜன வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படும்.

1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு திருத்தியமைக்கப்படும். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, முழு அதிகாரம் கொண்ட பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கு இதில் இடம் அளிக்கப்படும்.

இதில் தற்போதைய தேர்தல் முறை திருத்தியமைக்கப்பட்டு இந்தச் செயற்பாடுகள் குறுகிய காலத்துக்குள் செய்துமுடிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார்.

### பெருமளவு...

முன்னிலைத் தளபதியாக ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயாத்தனும் பணிபுரிந்து வருகின்றனர். ஜெயந்தன் படையணியுடன் இணைந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் மாலதி படையணியும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

### புலிகளுடனான...

இது தொடர்பாக- அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- புலிகளுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது, தமது கட்சியின் சார்பில் அல்ல. அரசாங்கத்தின் சார்பிலேயே அவர் உடன்பாட்டில் கைச்சாத்திட்டார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் யுத்தநிறுத்தத்தை சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவதானித்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் சமாதான செயலக செயலாளர் பேணாட் குணதிலக தனது கடமையை தொடர்ந்தும் செய்வார் என்றும் சிறில் ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு நிலைவரம் குறித்து பிரதமருடன் கூடி ஆராய்வு!

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மோதல் சம்பவத்தையடுத்து, இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவது குறித்து பிரதமர் தொண்டு நிறுவனங்களுடன் கூடி ஆராய்ந்துள்ளார்.

நேற்றுக் காலை அலரிமாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், நகர அபிவிருத்தி மற்றும் நீர் விநியோக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் இறுதியில் - அகதிகளின் நலன்களைக் கவனிப்பதற்காக விஷேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அதனை விரைவில் செயற்படுத்துமாறு பிரதமர் கேட்டுள்ளார்.

# ஈ.பி.டி.பி அலுவலகம் அனலைதீவில் எரிப்பு!

(யாழ்ப்பாணம்)

அனலைதீவுப் பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. கட்சியினரின் காரியாலயம் நேற்று அப்பகுதி மக்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரவு 7.30 மணியளவில் அனலைதீவு ஈ.பி.டி.பி. கட்சியினரின் அலுவலகம் முன் திடீரென ஒன்று திரண்ட பொதுமக்கள் அங்கு நிலை கொண்டிருந்த ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர்களை விரட்டியதுடன், அந்த அலுவலகத்தைத் தீயிட்டுக் கொழுத்தினர்.

அவ்வேளை - பொலிஸாரின் உதவியுடன் அவ்விடத்திற்கு வந்த ஈ.பி.டி.பியினர் மக்களை அச்சுறுத்தியதுடன், அவர்களைத் தாக்கவும் முற்பட்டனர்.

அங்கு வந்த பொலிஸார் பொதுமக்களை நோக்கிச் சுட்டதில் பொதுமகன் ஒருவர் காயமடைந்த நிலையில் அனலைதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவைச் சேர்ந்த ச.சிவா (வயது 33) என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவராவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### கிழக்கில்...

ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கு பகுதிக்குள் பிரவேசித்தமை போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல். இதனை ஜனாதிபதியும், புதிய அரசின் பிரதமரும், பொறுப்பேற்கவேண்டும் எனத் தெரிவித்ததுடன், இது கிழக்கு மாகாணத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் எனவும் தெரிவித்துள்ளது.

(01)

# காணாமற்போனோர் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம் விசாரணை

## கொழும்பு அலுவலகம் தகவல்

வடக்கு - கிழக்கில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போனவர்கள் குறித்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு அலுவலகம் விசாரணை நடத்துவதாகத் தெரிவித்துள்ளது.

காணாமற்போனவர்கள் பற்றிய ஆவணங்கள் தேடப்பட்டு, தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்த வருட இறுதிக்குள் தகவல்கள் திரட்டப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டுவிடும். அவை உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் கையளிக்கப்படும்.

வடக்கு - கிழக்கில் காணாமற்போனவர்கள் பற்றி, இதுவரை 20 ஆயிரம் பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர். இவற்றில் 9 ஆயிரம் பேரின் முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் ஏனைய 11 ஆயிரம் பேருக்கும் என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்கள் தேடப்படவேண்டியுள்ளதாக செஞ்சிலுவைச சங்கம் கூறியுள்ளது.

(01)

### புலிகள் மீட்டெடுத்த...

தங்குமிட வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

வாகரைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மேலும் 1500 இற்கும் அதிகமான குடும்பங்கள் வேறுபகுதிகளுக்குச் சென்று தங்கியுள்ளன. அவர்களும் மீளக்குடியேற விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாகரையில் சண்டைகள் நடைபெற்றபோது - பொதுமக்கள் யாராவது இறந்துள்ளார்களா? என்பது பற்றி, இனிமேல்தான் தெரிந்து கொள்ள முடியும். எனினும், அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்த ஒருவர் தெரிவித்த கருத்துப்படி, மூன்று பொதுமக்கள் வரை இறந்திருக்க வாய்ப்பிருப்பதாகத் தெரியவருகிறது என, அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்பாராத திடீர் நகர்வின்...

கருணா தமது அணியினரை தொப்பிகல தளத்துக்கு பின்வாங்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

வாகரைப் பிரதேசத்திலிருந்து முன்னேறி தொப்பிகல காட்டிலுள்ள புலிகளின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டுமானால் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள வாழைச்சேனையின் ஒரு பகுதியான ஏ 11 பிரதான வீதியைக்கடக்கவேண்டும்.

கருணா அணியினர் இந்த இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை வாகனேரி ஊடாக ட்ரக்குகளில் கடந்து பின்வாங்கிச்செல்ல இராணுவத் தரப்பு அனுமதியளித்திருந்தது.

இந்த நிலையில் வெருகலில் இருந்து முன்னேறிய புலிகளின் படையணிகள் வாகரைப் பிரதேசத்தில் தமது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டு முன்னேறுவதற்கான தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இந்நிலையில் அப்பகுதியின் காவலைப் பலப்படுத்திய சிறீலங்காப் பாதுகாப்புப் படை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை கடக்க முனைந்தால் அது யுத்தநிறுத்த மீறல் என்றும், அவ்வாறு தமது பிரதேசத்தைக் கடக்க முயல்பவர்கள் தாக்கப்படுவார்கள் என்றும் எச்சரித்ததுடன் மிகவும் உஷார்நிலையிலும் வைக்கப்பட்டது.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் மட்டக்களப்பின் பிற பகுதிகளிற்குள் எவ்வாறு செல்லப் போகிறார்கள் என்ற கேள்வி எழுந்தது.

ஆனால் யாருமே எதிர்பாராதவாறு அம்பாறை மாவட்டத்தினூடக உள்நுழைந்த புலிகள், அம்பாறை மாவட்டத்தில் கருணா அணியின் பிரதான செயற்பாட்டிடமாக இருந்த கஞ்சிக்குடிச்சாறு பகுதியுட்பட அம்பாறை மாவட்டப் பகுதிகளை விடுவித்ததுடன், மட்டக்களப்பின் இதர பகுதிகளிற்குச் செல்வதற்கான நகர்வையும் அங்கிருந்து மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பில் விடுவிக்கப்பட்ட பிரதேங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பணியாளர்கள் மக்களிற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், விளக்கங்களை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளனர்

### ஐ.ம.சு.மு. அரசாங்க...

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, ஜே.வி.பியின் ஆதரவுடனேயே அமைச்சர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதேவேளை- ஜே.வி.பியின் தலைமைப்பீடத்தினால் கொடுக்கப்பட்ட கடும் அழுத்தம் காரணமாக மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கப்பட்ட மகாவலி, விவசாயம் மற்றும் காணி, நீர்ப்பாசன அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பியின் அனுர திஸநாயக்காவிடம் வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் -

ஆனால், இதனை மைத்திரிபால சிறிசேன கடுமையாக எதிர்ப்பதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை- ஜே.வி.பியுடனான தற்போதைய நெருக்கடி நிலைமையை தீர்ப்பதற்கு, ஜனாதிபதி குழு ஒன்றை நிமித்துள்ளார். இந்தக்குழுவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே மற்றும் பேரியல், அஷ்ரப் ஆகியோர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதியால் நியமிக்க்ப்பட்ட குழு தொடர்பாக, தமக்கு எதுவும் தெரியாதென ஜே.வி.பியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12 .04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.